Registered as a News paper in Sri Lanka பக்கங்கள்: 06 [illegible]

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ சித்திரை மீ 31 ஆம் உ திங்கட்கிழமை (14 - 05 - 1990) ஹிஜ்ரி• 1410 ஷவ்வா 18 ஓசை 85

## "அமைதிப்படையில் குற்றமில்லை முன்னைய அரசே பொறுப்பு" -வி. பி. சிங்

(கர்நூல்)

''இந்தியாவின் முன்னைய அரசின் உத்தரவுக்கிணங்கவே இலங்கையில் அமைதி காக்கச்சென்றபடை நடந்துகொண்டிருக்கின்றது. எனவே அமைதிப்படை இலங்கையில் ஆற்றிய பணிபற்றிக் குறைசொல்லுவதற்கு இடமில்லை'' என்று இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங் கூறியிருக்கிறார்.

தமிழ்நாடு ஆந்திரா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் புயல், வெள்ளம், மழையினால் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டபின் புதுடில்லிக்குத் திரும்பிக் கொண்டிருந்த பிரதமர் சிங் விமானத்தில் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியப் புலனாய்வுத்துறைப் பிரிவுகள் பற்றியும் பகிரங்கமாகக் குறை கூறுவது நல்லதல்ல என்றும் பிரதமர் சிங் தெரிவித்தார்.

## மகாசங்க சபாவில் இருந்து பிக்கு பெல்பொலவியசி நீக்கம்

(கொழும்பு)

கோட்டை ஸ்ரீ கல்யாணி சாமகிரி தர்ம மகாசங்க சபாவில் இருந்து பிக்கு பெல்பொல வியசி நீக்கப்பட்டுள்ளதாக ஜெயவர்த்தனபுர கோட்டை பீடத்தின் மகாநாயக்கரான சங்கைக்குரிய லபுகம ஸ்ரீ லங்காநந்த மகாநாயக்க தேரோ ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு அறிவித்துள்ளார்.

இப்பிக்கு ஜப்பானில் மகாயான மதத்தை தழுவி அம் மதத்திற்குரிய பிக்குவாக மாறி, வரும் 27ஆம் திகதி இலங்கைக்கு வருகிறார். ஆகையினால் அவரை தமது சங்கத்தில் இருந்து விலக்கியதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் தேரவாத பௌத்தமே இதுவரை கால

(6ஆம் பக்கம் பார்க்க)

## குரங்கினால் வளர்க்கப்பட்ட சிறுமி மனிதரை விரும்பவில்லை.

(கென்யா)

நான்கு ஆண்டுகளாக கென்யாவின் காட்டுப்பகுதியில் குரங்குகளால் தத்தெடுத்து வளர்க்கப்பட்ட சிறுமி ஒருவரை வனவள அதிகாரிகள் கண்டுபிடித்து நகரப்பகுதிக்கு கொண்டுவந்துள்ளார்கள்.

இச்சிறுமிக்கு மனிதபாசை எதுவும் தெரியாததால் கென்யாநாட்டு சிறுவர் பராமரிப்பாளர்களால் மொழியைக் கற்பிக்கும் முயற்சி நடைபெற்று வருகிறது. ஆனால் அச்சிறுமியோ எதுவித மகிழ்ச்சி அறிகுறியும் காட்டாது மீண்டும் (6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.கோட்டையை பார்வையிட அமைச்சு அனுமதி தேவை

(யாழ்ப்பாணம்)

கோட்டை இராணுவ முகாமை பார்ப்பதற்கு நாம் எதுவித ஆட்சேபனையும் சொல்லவில்லை ஆனால் பலாலிக்குப்போய் அங்கிருந்து கொழும்பு பாதுகாப்புஅமைச்சிடம் அனுமதி பெற்று வந்தால் மட்டுமே உள்ளே நுழைய விடுவோம் என யாழ். கோட்டை இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சில நாட்களுக்கு முன் கோட்டை இராணுவ முகாமை பார்ப்பதற்கு மாணவர்களுக்கு அனுமதி உண்டு என செய்திகள் வெளிவந்தது குறிப்பிடத் தக்கதாகும் ஆனால் இதற்கு பல யாழ்ப்பாண மாணவர்கள் அனுமதி கேட்டு சென்றிருந்தனர் ஒரு

(6ஆம் பக்கம் பார்க்க)

### றோகண விஜயவீரா கொல்லப்பட்டபின்

# புதிய தலைமை; ஜே.வி.பி. புத்துயிர்!

## இதை அழிப்பதற்கு 5000 அதிரடிப்படை சிகிரியாவில்

(கொழும்பு)

றோகண விஜயவீராவும், அவரது சகாக்களும் கொல்லப்பட்டதுடன் அழிந்துவிட்டதாகக் கருதப்பட்ட ஜே. வி. பி. மீண்டும் புதிய தலைவராக சோமவன்ச அமரசிங்க என்பவர் தலைமையில் தளைத்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

இதே சமயம் மீண்டும் தலையெடுத்துள்ள ஜே. வி. பி. யை ஒழித்துக் கட்டுவதற்கு ஆயுதப்படைகளுடன் சுமார் ஐயாயிரம் விசேஷ

தப்பட்டுள்ளன.

புதிய ஜே.வி.பி. தலைமை கடந்த வெள்ளிகிழமை கொழும்பு பத்திரிகைகளுக்கு தட்டெழுத்தில் பதிக்கப்பட்டு

யதையிட்டுத் தாம் மகிழ்ச்சி அடைவதாகவும், தங்கள் மண்ணின் மைந்தர்களின் போராட்டத்தினாலேயே இந்தியா இலங்கையை விட்டு

### உண்டியலைத் திருடமுயன்றவரை பாம்பு கடித்தது

(விசேடநிருபர்)

உண்டியலை உடைத்து பணத்தைத் திருட முனைந்தவரை அரவம் தீண்டிது.

அல்லைபிட்டி, நீச்சல் தடாகம் பகுதியில் நிறுவப்பட்டுள்ள புனித அந்தோனியார் சொரூபபீடத்தில் வைக்கப்பட்டிருந்த உண்டியலை உடைத்து திருட முனைந்தவருக்கே இக்கதி ஏற்பட்டது.

கடந்த சனிக்கிழமை இச்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### எரிபொருள் யாழ் வந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

நேற்றும் நேற்றுமுன்தினமும் எரிபொருட்களை ஏற்றிக்கொண்டு இரு புகையிரதங்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளன. இதனால் கடந்த ஓரிரு நாட்கள் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு இன்றுடன் நீங்கலாம் எனத் தெரிகிறது.

இவ்விரு புகையிரதங்களிலும் 1, 17170 லீற்றர் பெற்றோலும், 162500 லீற்றர் டீசலும், 1, 43540 லீற்றர் மண்ணெண்ணையும் கொண்டு வரப்பட்டுள்ளது.

### சடலம் உரிமை

### ஈ. பி. ஆர். எல். எவ்.

# எம். பிக்கள் குழு அமைச்சர் பேச்சு

## பாராளுமன்றக் கட்டிடத்தில் நாளை நடைபெறும்

(கொழும்பு)

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் பெருந் தோட்டத் துறை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்தினாவை ஈ. பி. ஆர். எல். எவ். பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஐவர் குழு நாளை செவ்வாய்க்கிழமை காலை பாராளுமன்றக் கட்டிடத்தில்

தொன்பது அம்சக் கோரிக்கையை அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டுமென்றும் ஈ. பி. ஆர். எல். எவ். கேட்டிருந்தது.

முன்நிபந்தனை எதுவுமில்லாமல் எவரு[illegible] பேசுவதற்கு அரசு[illegible] என்று

அமைச்சர் ரஞ்சன் கூறியதைத் தொடர்ந்து பத்தொன்பது அம்சக் கோரிக்கை முந்நிபந்தனை அல்லவென்று ஈ. பி. ஆர். எல். எவ். எம்.பி. பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

### மகாவலி மகாசேயா

# இதை அழிப்பதற்கு 5000 அதிரடிப்படை சிகிரியாவில்

(கொழும்பு)

றோகண விஜயவீராவும், அவரது சகாக்களும் கொல்லப்பட்டதுடன் அழிந்துவிட்டதாகக் கருதப்பட்ட ஜே. வி. பி. மீண்டும் புதிய தலைவராக சோமவன்ச அமரசிங்க என்பவர் தலைமையில் தளைத்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

இதே சமயம் மீண்டும் தலையெடுத்துள்ள ஜே. வி. பி. யை ஒழித்துக் கட்டுவதற்கு ஆயுதப்படைகளுடன் சுமார் ஐயாயிரம் விசேஷ அதிரடிப்படை சிகிரியா, பொலநறுவைப் பகுதிகளில் தேடுதல் வேட்டையிலீடுபடுத்தப்பட்டுள்ளன.

புதிய ஜே.வி.பி. தலைமை கடந்த வெள்ளிகிழமை கொழும்பு பத்திரிகைகளுக்கு தட்டெழுத்தில் பதிக்கப்பட்டு அனுப்பி வைத்த செய்தி ஒன்றில் இந்தியா இலங்கை மண்ணை விட்டு வெளியேறியதையிட்டுத் தாம் மகிழ்ச்சி அடைவதாகவும், தங்கள் மண்ணின் மைந்தர்களின் போராட்டத்தினாலேயே இந்தியா இலங்கையை விட்டு வெளியேறியதாகவும் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அவ் அறிக்கையில் தமிழருக்கு எதிரான இனவாதத்தைத் தமது இயக்கம் கண்டிப்பதாகவும், ஆனால் பிரிவினைவாதத்தைத் தாம் எதிர்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை ஜே வி.பி.யின் புதிய தலைவர் அமரசிங்க விடுத்துள்ள ஓர் அறிக்கையில் எதற்கெடுத்தாலும் இந்தியா

(6ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் வந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

நேற்றும் நேற்றுமுன்தினமும் எரிபொருட்களை ஏற்றிக்கொண்டு இரு புகையிரதங்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளன. இதனால் கடந்த ஓரிரு நாட்கள் நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு இன்றுடன் நீங்கலாம் எனத் தெரிகிறது.

இவ்விரு புகையிரதங்களிலும் 1, 17170 லீற்றர் பெற்றோலும், 162500 லீற்றர் டீசலும், 1, 43540 லீற்றர் மண்ணெண்ணையும் கொண்டு வரப்பட்டுள்ளது.

# பாராளுமன்றக் கட்டிடத்தில் நாளை நடைபெறும்

(கொழும்பு)

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் பெருந் தோட்டத்துறை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்தினாவை ஈ. பி. ஆர். எல். எவ். பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஐவர் குழு நாளை செவ்வாய்க்கிழமை காலை பாராளுமன்றக் கட்டிடத்தில் சந்தித்துப் பேசவிருக்கிறது.

நீதி அமைச்சரும் வடக்கு-கிழக்கு மாகாண சமாதானக் குழுத் தலைவருமான ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீது லண்டனிலிருந்து இன்று நாடு திரும்பலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திவரும் அரசாங்கம் தங்களையும் அழைத்துப் பேசவேண்டுமென்று வலியுறுத்தி வந்தது. தாங்கள் சமர்ப்பித்த பத்தொன்பது அம்சக் கோரிக்கையை அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டுமென்றும் ஈ. பி. ஆர். எல். எவ். கேட்டிருந்தது.

முன்நிபந்தனை எதுவுமில்லாமல் எவரு[illegible]ம் பேசுவதற்கு அரசு[illegible] என்று அமைச்சர் ரஞ்சன் கூறியதைத் தொடர்ந்து பத்தொன்பது அம்சக் கோரிக்கை முந்நிபந்தனை அல்லவென்று ஈ. பி. ஆர். எல். எவ். எம்.பி. பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சடலம் உரிமை கோரப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த ஒன்பதாம் திகதி கச்சேரி இரயில் கடவையில் இரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டவரின் சடலம் யாழ். வைத்திய சாலை சவச்சாலைல் எவரும் உரிமை கோரப்படாத நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

ஏறக்குறைய 40 வயது

(6ஆம் பக்கம் பார்க்க)

## மகாவலி மகாசேயா வேலைக்குப் பணமில்லை

(கொழும்பு)

காணி, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி முன்னாள் அமைச்சர் காமினி திஸாநாயக்காவின் மகாவலி மகாசேயா திட்டத்திற்கு ஏலவே 7 கோடியே 87 லட்சம் ரூபா செலவாகியுள்ளது.

இந்த மகாசேயாவின் கட்டிட வேலைகள் பணப் பற்றாக்குறைவினால் இடைநடுவில் கைவிடப்படும் நிலையிலுள்ளது. நிர்மாண வேலைகளை

(6ஆம் பக்கம் பார்க்க)

## போலிவிபரம் சமர்ப்பித்து ஜனசக்தி நிவாரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனசக்தி நிவாரணம் பெற சிலர் போலி விபரங்களை சமர்ப்பித்து மோசடி இடம் பெற்றுள்ளமை தற்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் ஜனசக்தி நிவாரணம் தற்போது வாழைச்சேனை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ளவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

வாகரை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள ஒரு சிலர் வாழைச்சேனை பிரிவில் தம்மை பதிவு செய்து இவ்வாறு ஜனசக்தி நிவாரணம் பெற்று வருவது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (37)

# க. பொ. த. (உயர்தரம்) பரீட்சைக்கு விண்ணப்பங்கள் குறைவு

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதரம் (உயர்தரம்) பரீட்சை இவ்வாண்டு ஆகஸ்ட்டில் நடைபெறவுள்ளது. ஆனால், பரீட்சைக்குத் தோற்ற இருக்கும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் மிகக் குறைந்த அளவில் கிடைத்துள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

க. பொ. த. (உயர்தரம்) பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்வதற்கான காலக்கெடு இன்று (மே14) டன் முடிவடைகிறது. முன்னெப்போதும் இல்லாதவாறு இம்முறை பள்ளிக்கூட மாணவர்களிடமும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்தும் விண்ணப்பங்கள் மிகக் குறைவாகத்தான் கிடைத்துள்ளதாம். மார்ச் மாதமளவில் பள்ளிக்கூடங்களுக்கு விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்பட்டும் இதுவரை பல அதிபர்கள் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து இதுவரை திரும்ப அனுப்பவில்லை. ஆகவே பள்ளிக்கூடங்களும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் உடனடியாக விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைக்கும்படியும், எக்காரணம் கொண்டும் பரீட்சை பின்போடப்படாது என்றும் பரீட்சைப் பகுதிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

க. பொ. த. உயர்தரப் பரீட்சை ஆகஸ்ட் 10 ஆம் திகதி ஆரம்பமாகி 20 நாட்கள் நடைபெறும்.

இதேவேளை மார்ச் மாதத்தில் இடம்பெற்ற க. பொ. த (சாதாரணம்) பரீட்சைப் பெறு

(6ஆம் பக்கம் பார்க்க)

## காமினி மீது குற்றச்சாட்டு விசாரணைக்கு உத்தரவு?

(கொழும்பு)

முன்னாள் மகாவலி பெருந்தோட்ட அமைச்சரான காமினி திசாநாயக்கா மீது ஊழல் விசாரணைக்கு உத்தரவிடப் படலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

தற்பொழுது லண்டனில் தங்கியிருக்கும் காமினி திசநாயக்கா அவர்கள் தமது அமைச்சர் பதவி போனபின்னர் தனது எம். பி. பதவியையும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாடுமுழுவதும் மூளைக்காய்ச்சல் பரவும் ஆபத்து

(கொழும்பு)

மூளைக் காய்ச்சல் நோய் செப்டெம்பர் மாதமளவில் மீண்டும் நாடுமுழுவதும் பரவும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று சுகாதார அமைச்சு எச்சரிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது.

இந்நோயினால் ஏற்கனவே 1200 பேர் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் என சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்நோயில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக தடுப்பூசி மருந்து ஏற்றும் திட்டம் ஆரம்பிக்கப்படும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பத் தகராறினால் இளைஞன் அடித்துக் கோலை

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தில் ஏற்பட்ட வாக்குவாதம் ஒன்றினைத் தொடர்ந்து ஏற்பட்ட கைகலப்பில் குண்டாந்தடித் தாக்குதலுக்குள்ளான முகமட் காசீம் அயூப்கான் என்பவர் நேற்று முன் தினம் யாழ். வைத்தியசாலையில் மரணமானார்.

27 வயதுடைய மேற்படி நபர் வீட்டில் ஏற்பட்ட திருமணப் பிரச்சினை ஒன்றின் போது தமது சகோதரர்களுடன் ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

### புதிய சாரதி

## அனுமதிப்பத்திரம் சட்டபூர்வமற்றது நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

புதிதாக வழங்கப்படும் மோட்டார் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் சட்டபூர்வமற்றது என்று கொழும்பைச் சேர்ந்த சட்டத்தரணியான கீர்த்திஸ்ரீ குணரெத்னா மேன்முறையீட்டு மன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்துள்ளார். வழக்கில் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரையும், மேலதிக ஆணையாளரையும் எதிராளிகளாக்க காட்டியுள்ளார். சிறு புத்தக உருவில்அமைந்த அனுமதிப்பத்திரங்களை மீளப் பெற்றுக்கொண்டே அட்டை வடிவில் அமைந்த புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

புதிய அனுமதிப் பத்திரங்கள் தேவையற்றவை, சட்ட

(6ஆம் பக்கம் பார்க்க)

## சாரண ஆணையாளர் விபத்தில் மரணம்

(கொழும்புத்துறை)

பிரபல சமூக சேவையாளரும் யாழ் மாவட்ட சாரண ஆணையாளருமான திரு செ. வரதலிங்கம் விபத்தில் மரணமானமைக்கு யாழ் மாவட்ட சன சமூக நிலையங்களின் சம்மேளன ஆட்சிக்குழுக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இரவு வேலணையில் இடம் பெற்ற லொறி மோட்டார்சைக்கிள் விபத்தில் திரு செ. வரதலிங்கம் மரணமானார் இளைப்பாறிய வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபரான

(6ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் போராளி மரணம்

(அம்பாறை)

கல்முனை விடுதலைப் புலிகள் முகாமிலிருந்த புலிகள் போராளியான அலெக்ஸ் (வயது 20) கடந்த சில தினங்களுக்கு முன்னர் விபத்தொன்றில் சிக்கியதால் மரணமானார்.

பெரிய நீலாவணையைச் சேர்ந்த இவரது மரணச் சடங்கில் புலிகள் இயக்கப் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செய்தனர்.

## தொழிற்சங்கவாதிகளின் வியாபாரத்தால் தொழிலாளர்கள் பல கூறுகளாயினர்

தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுசேருவதன்மூலமே எமது இலட்சியத்தை நோக்கி விரைவாகச் செல்லமுடியும். கடந்தகாலங்களில் ஏமாற்றுக்காரர் நடத்தியஅரசியல் வியாபாரம் தொழிற் சங்க வியாபாரங்களால்மக்களும் தொழிலாளர்களும் பல கூறுகளாகப் பிளவுபட்டு எமது உரிமைப் போராட்டம் பலவீனமடைந்திருந்தது. இன்று இந்தநிலை மாறி மக்களும் தொழிலாளர்களும் ஒன்றுசேர்ந்து ஒரே குரலாக ஒலிக்கின்ற, செயற்படுகின்ற பிரகாசமான சூழ்நிலை தோன்றியுள்ளது என கடந்த சனிக்கிழமை தர்மபுரத்திலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச் செயலகத்தில் தமிழீழத் தொழிற் சங்கங்களுக்கான

### பரமமூர்த்தி

கூட்டத்தில் அதன் பிரதம அமைப்பாளர் பரமமூர்த்தி

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர். அடையாள அட்டை வழங்கக் கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண ஆசிரியர்கஞ்க்கு உத்தியோக பூர்வ அடையாள அட்டைகளை வழங்க வேண்டும் என ஸ்ரீலங்கா பட்டதாரி ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இவ்வேண்டுகோள் மாகாண சபை கல்விச் செயலாளரிடம் விடுக்கப்பட்டதாக அச் சங்கத்தின் செயலாளர் ஜனாப் ஏ. எல். எம். முக்தார் தெரி

(6 ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

குமுதம் ரூ. 7.00 ஆனந்த விகடன் ரூ. 8.00, இந்திய ருடே தமிழ் ரூ. 22.00, ஞான பூமி ரூ. 20.00 ரத்தினபாலா (சிறுவர் சஞ்சிகை) ரூ. 9.50 கல்கிரூ.8.00மற்றும்அனைத்து சஞ்சிகைகளும் விலை குறைக் கப்பட்டுள்ளன. வியாபாரிக ளுக்கு விற்பனை விலையில் இருந்து கழிவு வழங்கப்படும். தொடர்பு கொள்ளவும்: பூபா லசிங்கம்புத்தகசாலை, யாழ்ப் பாணம்.

வகுப்புக்கள்

தொழில் நுட்ப அறிவைப் பெறுபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் RADIO- T.V, DECK, Air Conditioning, Refrigcration வயறிங், வெல் டிங், வைண்டிங், Typing, Spoken-English புதிய பிரிவு கள் ஆரம்பமாகின்றன. குறு கிய காலத்தில் சிறந்த செய் முறை அறிமுறைப்பயிற்சிக ளுடன் பெறுமதியான சான் றிதழ் வழங்கப்படும். VISPA ENGINEERING AID HALL, 328, NAVALAR ROAD, JAFFNA. (B-664)


## சட்டவிரோத மின்கம்பி தாக்கிப் பெண் காயம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு ஊரை தீவுப் பகுதியில் சட்டவிரோத மின்னிணைப்பினால் குடும்பப் பெண் ஒருவர் தாக்கப்பட்டு காயமடைந்தார்

ஊரைதீவைச் சேர்ந்த திருமதி ஜெ. புவனேஸ்வரி என்ற பெண்மணியே இவ்வாறு தாக்கப்பட்டவராவார்

அயல் வீடொன்றில் நடந்த பிறந்தநாள் விழா வொன்றிற் காக சட்டவிரோதமாக மின் பெறுவதற்காக தொடுக்கப் பட்ட கம்பி இவரது வளவினூ டாக சென்றதை அறியாத இப் பெண் அக்கம்பியின் அருகில் விறகெடுப்பதற்காக சென்ற வேளை மின்னினால் தாக்கப் பட்டார் (22)

## ஹாட்லி, மெதடிஸ்த கல்லூரிகளில்6-ம்வகுப்புகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும், மெதடிஸ்த பெண்கள் கல்லூரியிலும் கடந்த வாரம் முதல் 6ஆம் ஆண்டு வகுப்புகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கத்தின் உத்தரவின் பேரில் இவ்விரு கல்லூரிகளுக்கும் 6ஆம்ஆண்டு மாணவர்களை அனுமதிப் பதற்கான பிரவேசப் பரீட்சை எதுவித நிபந்தனையும் அற்ற திறந்த பரீட்சையாக நடாத் தப்பட்டே மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இக் கல்லூரிகளின் 6ஆம் ஆண்டில் மாணவர்களை அனுமதிப்பதில் இக் கல்லூரி களின் பெற்றோர்களுக்கும் யாழ். கல்வித் திணைக்களத் திற்கும் இருந்து வந்த இழு பறியினால் இவ்விரு கல்லூரி களிலும் 6ஆம்ஆண்டை ஆரம் பிக்க முடியாமல் இருந்து வந்தது. ஆனால் பெற்றோ ரின் நீதியான கோரிக்கை களுக்குக் கல்வி அமைச்சு செவிசாய்த்து தலையிட்டு பெற்றோர்களுக்கு விமோச னம் வழங்கக்கூடிய உத்தா வைப் பிறப்பித்த பின்னரே இக் கல்லூரிகளினதும் பெற் றோர்களுக்கும், கல்வித் திணைக்களத்திற்கும் இருந்து வந்த இழுபறி நிலை நீங்கி யது.

இதனையடுத்து யாழ்ப் பாணத்தின் புதிய கல்விப் பணிப்பாளராகப்பதவியேற்ற திரு. இரா. சுந்தரலிங்கம் இவ்விரு கல்லூரிகளின் அதிபர் களுக்கும் பிறப்பித்த உத்தர வையடுத்து உடனடியாக அனுமதிப் பரீட்சை நடாத் தப்பட்டு வகுப்புகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கல்லூரிகளிலும் 6ஆம் ஆண்டில் நாலு பிரிவு கள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது. (25)

## கல்விப்பகுதியும், ஆசிரியரும் தமிழில் கையொப்பம்

(கொழும்புத்துறை)

யாழ்.மாவட்ட பாடசாலை களில் தமிழ்மொழித் தினம் கொண்டாடுவது வரவேற்கத் தக்கது. இதேவேளையில் ஆங் கில மொழியிலேயே தமது ஒப்பங்களை இடுவதை வழக்க மாகக் கொண்ட கல்வித் திணைக்கள அதிகாரிகளும், ஆசிரியர்களும் தமிழ்த் தினத் தைத் தொடர்ந்து தமது ஒப் பங்களைத் தமிழ்மொழி யிலேயே இடவேண்டுமென்று யாழ். மாவட்ட இந்து இளை ஞர் பேரணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ். கல்வித்திணைக்களம் இதற்கு வழிகாட்டுவதுடன் தமிழ்மொழியிலான சுற்றுநிரு பங்களில் அதிகாரிகள் தமது ஒப்பங்களை தமிழ்மொழியில் இட்டு முன்மாதிரி காட்ட வேண்டும்என்றும் அவ்வேண்டு கோளில் குறிப்பிடப்பட்டுள் ளது. (24)

## நிதி ஒதுக்கீடு

மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் திரு.க.கார்த்தி கேசுவின் முயற்சியினால் றோட்டறிக் கிளப்பின் ஆதர வுடன் புளியந்தீவு சிறுவர் பூங்கா புனரமைப்பு செய்யப் பட்டுள்ளது.

அத்துடன் வெபர் விளை யாட்டு அரங்கும் புதிதாக புனர்நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகிறது.

பயனியர்வீதி லேடி மெனிங் வீதியில் சுற்றுவட்டம் கட்டு வதற்கு மாநகரசபை நிதி ஒதுக்கியுள்ளது. (29)

## மெய்வல்லுநர் போட்டி

(கிளிநொச்சி)

கனகாம்பிகைகுளம் கனி ஷ்ட வித்தியாலய மெய்வல் லுநர் போட்டி16.5.90 புதன் கிழமை பிற்பகல் மேற்படி பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. (49)

## பாடசாலை மலசல கூடங்களில் குப்பை நிறைந்துள்ளன

(புங்குடுதீவு)

புங்குடுதீவிலுள்ள பாட சாலைகளில் அமைந்துள்ள மலசல கூடங்களில் பெரும் பாலானவை குப்பை கூழங் கள் நிறைந்தனவாயும், துர் நாற்றம் வீசுபவையாகவும் காணப்படுகின்றன.

அத்துடன் இவற்றின் கதவு கள் உடைந்து தொங்கிய நிலையில் காணப்படுகின்றன. மேலும் இவற்றில் நிரந்தர பாவனைக்காக வாளியோ வேறு எந்த பொருட்களோ வைக்கப்படுவதில்லை.

இதனால் ஆசிரியர்களும் மாணவர்களும் பெரும் சிரமங் களை எதிர்நோக்க வேண்டி யுள்ளது.

அத்துடன் சில பாடசாலை களில் குடிதண்ணீர்ப் பிரச் சினையும் ஆசிரியர்களையும், மாணவர்களையும் பாதிக் கின்றது.

இது குறித்து பல தடவை கள் மேலிடத்துக்கு புகார்கள் தெரிவித்தும் எவ்வித நட வடிக்கையும் எடுக்கப்பட வில்லை. (22)

## களுவன்கேணி பஸ்சேவையை ஆரம்பிக்குமாறு கோரிக்கை

மட்டக்களப்பு மாவட்டத் தில் ஏறாவூர் பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள் ளடக்கிய கிராமமான களுவன் கேணி கிராமத்தில் சுமார் ஐயாயிரம் மக்கள் வசிக்கின் றனர்.

அம் மக்கள் கடற்தொழி லையே நம்பி வாழ்கின்றவர் கள். அவர்கள் போக்கு வர த்து வசதியின்மையால் கடும் கஷ்டம் அடைகின்றனர்.

வெள்ளிக்கிழமைகளில் அண் மையில் அமைந்த வந்தாறு மூலைக் கிராமத்திற்கு கிளி னிக் வசதிக்கு வருகைதரும் தாயும், சேயும் அகோரவெயி லில் இரண்டு மைல்கள் தூரம் கால் நடையில் சென்று வரு கின்றனர்.

ஏனைய சகல அலுவல்களுக் கும் இதே கஷ்டத்தினையே அனுபவித்து வருகின்றனர்

கடந்த 1983 ஆம் ஆண்டுக்கு முன்பு களுவன்கேணிக்கு மட் டக்களப்பு டிப்போவினால் பஸ்சேவை நடத்தப்பட்டது. அதன்பின்பு நாட்டில் நெருக் கடி நிலை அதிகரித்ததைத் தொடர்ந்து இச் சேவை நிறுத்தப்பட்டது.

தற்பொழுது நாட்டில் சகஜ நிலை தோன்றி உள்ள படி யால் களுவன்கேணிக்கு பஸ் சேவை நடத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறி க்கை ஒன்றை வெளியிட்டுள் ளதாக களுவன்கேணி இரண் டாம் பிரிவு கிராம சேவை உத்தியோகஸ்தர் திரு. க. செல்வராஜா தெரிவித்தார். (29)

## கோமாரி நோய் தடுப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத் தில் கால்நடை நோய்களான கோமாரி, கருங்காரி ஆகிய வற்றிக்கான தடுப்பு நடவடிக் கைகள் தயார் நிலையிலிருப் பதாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். அரு ளையா தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில்கோமாரி நோய் கட்டுப்படுத்தப்பட்டுள் ளதாகவும் அவர் தெரிவித் தார். (37)

## பாஞ்சாலியின் சீற்றம் நாட்டுக்கூத்து

(கல்லாறு)

திருகோணமலையில் விரை வில் நடைபெற இருக்கும் சாகித்திய மண்டல கலை நிகழ்ச்சிகளில் கல்முனை பாத் திமா கல்லூரி ஆசிரியர் மாண வர் இணைந்து பங்கு கொள் ளும், களுவாஞ்சிக்குடி மக்கள் வங்கி முகாமையாளர் திரு. கே. குழந்தைவேல் தயாரித் தளிக்கும் 'பாஞ்சாலியின் சீற் றம்' என்னும் வடமோடி நாட்டுக்கூத்தும் இடம்பெற வுள்ளது. (45)


யாழ்நகரில் இன்றைய சினிமா

மனோகரா - (யாழ்)
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு 10-30, 2-30. 4-00, 6.30 & 9.30
BRUCELEE IN RUCELEE THELEGEND
கராட்டிப் படம்

வெலிங்டன் (யாழ்)
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

ஹரன் - (யாழ்)
தினசரி 4·00, 6·45
சனி, ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10·30, 2·30, 6·30, 9·30
கமலஹாசன் - சரண்யா நடித்த
"நாயகன்"
75 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
(கடைசி வாரம்)
B 878

லிடோ (யாழ்)
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு காலை10-30 2-30 9-30
கமல், ரஜனி, ஸ்ரீதேவி நடித்த
16 வயதினிலே
(B/860)

ராஜா (யாழ்)
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·00, 2·00, 4·45, 7·00, 9·45
EDDIE MURPHY IN BEVERLY HILLS COP I
( Color - cope )

வின்ஸர் - யாழ்
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

நியூ சாந்தி (யாழ்)
தினசரி 4.00, 6.30 7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00 7-30 9-00
UNMASKING THE IDOL
(Col or)


## ஆலயத் திருநாளில் இலங்கை வங்கி கிளை

(கிளிநொச்சி)

இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு மேற் படி ஆலய முன்றலில் நட மாடும் இலங்கை வங்கிக் கிளை ஒன்று ஆரம்பித்துவைக் கப்பட்டது.

கண்டாவளை உதவி அர சாங்க அதிபர் சதா தனபால சிங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நடமாடும் இலங்கை வங்கிக் கிளையில் நூற்றுக்கணக்கான வர்கள் தமது பிள்ளைகளின் பெய ரில் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்து வைத்தனர்.

மேற்படி வங்கி முகாமை யாளர் க. சிவராசா தலைமை யில் இவ்வைபவம் நடைபெற் றது.

Dealers in Motor Spares of

ஆசிரியர்களும் தமிழ்த் தினத் தைத் தொடர்ந்து தமது ஒப் பங்களைத் தமிழ்மொழி யிலேயே இடவேண்டுமென்று யாழ். மாவட்ட இந்து இளை ஞர் பேரணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ். கல்வித்திணைக்களம் இதற்கு வழிகாட்டுவதுடன் தமிழ்மொழியிலான சுற்றுநிரு பங்களில் அதிகாரிகள் தமது ஒப்பங்களை தமிழ்மொழியில் இட்டு முன்மாதிரி காட்ட

கேசுவின் முயற்சியினால் றோட்டறிக் கிளப்பின் ஆதர வுடன் புளியந்தீவு சிறுவர் பூங்கா புனரமைப்பு செய்யப் பட்டுள்ளது.

அத்துடன் வெபர் விளை யாட்டு அரங்கும் புதிதாக புனர்நிர்மாண வேலைகள் நடைபெற்று வருகிறது.

பயனியர்வீதி லேடி மெனிங் வீதியில் சுற்றுவட்டம் கட்டு வதற்கு மாநகரசபை நிதி ஒதுக்கியுள்ளது. (29)

ளது. (25)

## மெய்வல்லுநர் போட்டி

(கிளிநொச்சி)

கனகாம்பிகைகுளம் கனி ஷ்ட வித்தியாலய மெய்வல் லுநர் போட்டி16.5.90 புதன் கிழமை பிற்பகல் மேற்படி பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. (49)

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத் தில் கால்நடை நோய்களான கோமாரி, கருங்காரி ஆகிய வற்றிக்கான தடுப்பு நடவடிக் கைகள் தயார் நிலையிலிருப் பதாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். அரு ளையா தெரிவித்தார்.

இம்மாவட்டத்தில்கோமாரி நோய் கட்டுப்படுத்தப்பட்டுள் ளதாகவும் அவர் தெரிவித் தார். (37)

(கல்லாறு)

திருகோணமலையில் விரை வில் நடைபெற இருக்கும் சாகித்திய மண்டல கலை நிகழ்ச்சிகளில் கல்முனை பாத் திமா கல்லூரி ஆசிரியர் மாண வர் இணைந்து பங்கு கொள் ளும், களுவாஞ்சிக்குடி மக்கள் வங்கி முகாமையாளர் திரு. கே. குழந்தைவேல் தயாரித் தளிக்கும் 'பாஞ்சாலியின் சீற் றம்' என்னும் வடமோடி நாட்டுக்கூத்தும் இடம்பெற வுள்ளது. (45)

## இலங்கை வங்கி கிளை

(கிளிநொச்சி)

இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு மேற் படி ஆலய முன்றலில் நட மாடும் இலங்கை வங்கிக் கிளை ஒன்று ஆரம்பித்துவைக் கப்பட்டது.

கண்டாவளை உதவி அர சாங்க அதிபர் சதா தனபால சிங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நடமாடும் இலங்கை வங்கிக் கிளையில் நூற்றுக்கணக்கான வர்கள் தமது பிள்ளைகளின் பெய ரில் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்து வைத்தனர்.

மேற்படி வங்கி முகாமை யாளர் க. சிவராசா தலைமை யில் இவ்வைபவம் நடைபெற் றது.


**Dealers in Motor Spares of**

Pegeuot 404 - 504


Austin A50 - A60 - A40 - A1100

V/W 1200 - 1300 - 1302

**& Door Beadings Gold Seal** (Direct Importers)

Clutch Plate - BRAKE LININGS

Bearings...



**P. SOMASUNDRAM & Co.**

293, Stanley Road,

**Jaffna.**

**P. சோமசுந்தரம் அன் கோ**

293, ஸ்ரான்லி வீதி,

**யாழ்ப்பாணம்.**

B.696

# சோவியத் ரஷ்யாவின் பொருளாதார சீரமைப்பு வேலையில்லாப் பிரச்சினையை அதிகரிக்கும்

## அதிபர் கொர்பச்சேவ் எச்சரிக்கை

(மொஸ்கோ)

சோவியத் யூனியனில் கொண்டு வரப்படும் பொருளாதார சீரமைப்புகள் நாடெங்கிலும் வேலையில்லாத் திண்டாட்டதைக் கொண்டுவரும் என சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் எச்சரித்திருக்கிறார்.

தொழில் துறையில் சீரமைப்புகள் ஏற்படவேண்டுமெனில் தற்காலிக வேலை இழப்புகள் தவிர்க்க முடியாதது என்றும் சில ஆலைகள் வேறு வகையான உற்பத்திக்கு மாற்றப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

ஆலைகளின் தொழிலாளர்கள் மத்தியில் பேசிய கொர்பசேவ் இன்று சோவியத் யூனியன் உள்நாட்டு ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் இக்கட்டான ஒருநிலையில் இருக்கின்றதென்றும் இத்தகைய நிலையில் தொழிலாளர்களின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் கூறினார்.

மேற்குலக அரசியல் நிலை பற்றிக் குறிப்பிட்ட ஜனாதிபதி ஐக்கிய ஜேர்மனி நேட்டோ அணியில் சேர இருப்பது பற்றிய தனது கருத்துகளை வெளியிட்டார்.

பால்டிக் குடியரசுகளின் சுதந்திரப் பிரகடனங்கள் பற்றிக் குறிப்பிட்ட அவர், இவை நடைமுறைக்கு சாத்தியமாகாது என்றும், அக்குடியரசுகள் மீது தாம் கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் தெரிவித்தார். லித்வேனியா மீது தாம் மேற்கொண்ட நடவடிக்கை ஏனைய குடியரசுகளுக்கு ஒரு பாடமாக அமையும் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் பொருளாதார சீரமைப்புப் பற்றிக் கூறிய ஜனாதிபதி கொர்பசேவ் மேற்கு நாட்டில் ஒரு தொழிலாளி செய்யும் வேலையை சோவியத் யூனியனில் மூன்று தொழிலாளிகள் செய்வதாகக் கூறிய அவர் இந்நிலைமை முற்றிலும் மாறுபட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை மூன்று பால்டிக் குடியரசுகளின் ஜனாதிபதிகளும் எஸ்தோனியாவின் தலைநகரில் சனிக்கிழமை கூடி தமது அரசியல் பொருளாதார கூட்டுறவு ஒத்துழைப்புப் பற்றி பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இப்பேச்சு வார்த்தையின் முக்கிய நோக்கம் எவ்வாறு சோவியத் அரசின் பொருளாதார, அரசியல் நெருக்கடிகளை பால்டிக் குடியரசுகள் வென்றெடுப்பது என்பது தான்.

# சமய விழாவில் இந்துக்கள் மீது சீக்கியர் துப்பாக்கிச் சூடு

(அமிர்தசரஸ்)

இந்தியாவின் மாநிலமான பஞ்சாப்பில் சீச்கிய தீவிரவாதிகள் இந்துக்கள் கலந்து கொண்ட விழாவொன்றில் சுட்டபோது நான்குபேர் கொல்லப்பட்டனர். ஐந்துபேர் படுகாயமுற்றனர்.

பஞ்சாப்பில் ஜலந்தர் நகருக்கு அருகே உள்ள கிராமத்தில் அறுவடை காலங்களில் நடக்கும் சக்திநோன்பு விழாக்களில் கலந்து கொண்ட மக்களிடையே இச்சூட்டுச் சம்பவம் நடைபெற்றது.

இவ்விழாவில் இருநூறுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர் 'மதவழிபாட்டில் துதிப்பாடல் அசிங்கமாக பாடப்பட்டிருப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகத்தான்' இந் நடவடிக்கையை தாம் மேற்கொண்டதாக சீக்கிய தீவிரவாதிகள் தெரிவித்தனர்.

இதற்கு முன்பு தாம் இந்துக்களுக்கு இவ்வாறு எச்சரித்ததாகவும் அதையும் மீறிஇவர்கள் இவ்வாறு நடந்து கொண்டதனால் இந் நடவடிக்கை எடுத்ததாகவும் குறிப்பிட்டிருந்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து பஞ்சாப்பில் நிலைமை குழப்பமடைந்துள்ளது. இக்கலவரங்களின் போது மேலும் எட்டுப்பேர் . கொல்லப்பட்டனர்.

# மத்திய கிழக்கு நாடுகளுக்கு பெனாஸிர் சுற்றுப் பயணம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமமந்திரி பெனாஸிர் பூட்டோ வரும் செவ்வாய்க்கிழமை மத்திய கிழக்கில் எட்டு முஸ்லிம் நாடுகளுக்கு அரசியல் விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறார்.

காஷ்மீர்விவகாரம் குறித்து அரசியல் ரீதியான முயற்சிதான் இப்பயணமென பெனாஸிர் பூட்டோவின் வெளியுறவுத் செயலாளர் அசமத்கான் கூறினார்.

காஷ்மீர் பிரச்சினையால் காஷ்மீர் மாநிலத்தில் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இவ்விஜயம் என அவர் குறிப்பிட்டார்.

## நேபாள அரசி சமூகசேவை தலைமையில் இருந்து ராஜினாமா

(காட்மண்டு)

நேபாள அரசி ஐஸ்வர்யா சமூக சேவைகளுக்கான தேசிய ஒருங்கிணைப்பு தலைமைப்பதவியில் இருந்து ராஜினாமாச் செய்துள்ளார்.

இத் தேசிய ஒருங்கிணைப்பு குழுவின் சட்டுப்பாட்டிற்குக் கீழ் தான் நேபாளத்தில் உள்ள அரசியல் சார்பற்ற எல்லா சமூகக் குழுக்களும் வெளிநாட்டு உதவிகளும் இருந்தன.

ராஜினாமாப் பற்றிக் கூறிய அரசிஐஸ்வர்யா எந்தப்பணத்தையும் தான் மோசடி செய்யவில்லை என்றும் வெளிநாட்டு வங்கியில் தனக்குஒரு பணமும் இல்லைஎன்றும்தெரிவித்தார்.

## விதைப்பு வேலைகள்

(நிந்தவூர்)

நிந்தவூர்ப் பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள விவசாயக் கண்டங்களில் சிறுபோக நெற்காணிக்செய்கைக்கான விதைப்பு வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

நிந்தவூர்ப் பற்றிலுள்ள 8122 ஏக்கர் காணியில் சிறுபோக நெல்விதைப்பு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர் விவசாயப்போதனாசிரியர் ஜனாப் எம் ஆதம் இதற்கு முன்னோடியாக, நெற்செய்கை, பசளை பாவனை, ஒருங்கிணைந்த பூச்சிக்சட்டுப்பாடு, என்பன தொடர்பான பயிற்சி வகுப்புகளை விவசாயிகளுக்கு நடத்தி வருகின்றார்.

## நாட்டின் பொருளாதாரம் மத்திய வங்கி அறிக்கை

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் 1989 ஆம் ஆண்டு பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. ஆனால் அரசு மேற்கொண்ட ஸ்திர நடவடிக்கைகளால் பொருளாதாரம் சிறிது வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஈட்டிய இந்த அடிப்படை பொருளாதார ஸ்திரம் இவ்வாண்டு பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

# யாழ். நகர அபிவிருத்தி சபைக்கு ஏற்ற ஒரு அலுவலகம் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபையுடன் இணைந்த நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஏற்ற ஒரு அலுவலகம் அமைத்துகொடுக்கப்படவில்லை. இவ் அதிகார சபையின் அலுவலர்க்கும் எதுவித வசதியும் செய்துகொடுக்கப்பட்டதாக அறிகுறிகளும் தென்படவில்லை என சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

இச்சபை தற்போதைய நிலைமையில் எமது மாவட்டத்திற்கு மிகமிக அத்தியாவசியமானது அதேபோல அதிகாரசபையில் இருக்கும் அலுவலரின் சேவையும் மிகவும் அத்தியாவசியமானதாகும்.

ஆனால் பல முறை மேலதிகாரிகளுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தும் ஒரே ஒரு மேசையும் கதிரையும் தவிர எதுவித வசதிகளும் அவருக்கு செய்து கொடுக்கப்படவில்லை.

வி. அருட்செல்வம் என்ற இவ் அலுவலருக்கும் அவருடைய உயரதிகாரி திரு. சிவபாலன் என்பவருக்கும் ஒரே ஒரு மேசையும் கதிரையும் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலைமையை தொடர்ந்து சகித்து கொள்ள முடியாத திரு. சிவபாலன் என்பவர் வெளிநாடு சென்றுவிட்டதாகவும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார். (லோ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில்

# குளிர்பான விற்பனையில் மொத்த, சில்லறை வியாபாரிகள் கொள்ளை லாபம்

1983 ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழ் பிரதேசங்கள் எங்கும் வாழ்கைச் செலவு விஷம் போல் ஏறியுள்ளது. இலங்கையில் பொதுவாகவே இக்காலப்பகுதியில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி, இராணுவச் செலவீடு, அன்னியச் ... யில் எல்லோருக்கும் கொடுக்க வேண்டியிருந்ததால் முதலாளிகளால் ஒன்றும் செய்ய முடியாமல் மக்களிடம் அவற்குரிய சுமைகள் சுமத்தப்பட்டது என்பதாகும். ஆனால் சில முதலாளிகள் இவர்களுக்கு குறிப்பிடக்கூடிய தொகை பானங்களின் விலைகளைக் கொள்ளலாம். குளிர்ப்பானங்களுக்கு புலிகளால் விதிக்கப்பட்ட வரி போத்தலுக்கு 50 சதம் ஆகும் ஆனால் நடைமுறையில் சாதாரணமாக ஒரு குளிர்ப்பானத்தின் விலை அதிகரிப்பு இரண்டு ரூபாவில் லாபமாகும். இதைவிட அவர்கள் மேலதிக லாபம் வைக்கக் கூடாது.

அத்தோடு சில்லறைகளாகவோ மொத்தமாகவோ இக் குளிர்ப்பானங்களை விநியோகிக்கும் பொறுப்பையும் கொம்பனிகளே ஏற்றுக் கொண்டுள்ளவதோடு இச்சோடாக்களுக்குரிய ஏஜெண்டுக்கள் தமது களஞ்சியங்களில்வைத்தே அவற்றை விநியோகிக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது சில்லறை விநியோகக்கூலியையும் அவர்கள் பெற்றுக் கொள்கின்றார்கள் என்பதாகும்.

இதேபோன்று யானைமார்க் குளிர்பானங்கள் விநியோகத்தர்களால் சராசரியாக 6 ரூபாவிற்கு சில்லறை வியாபாரிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றது. சில்லறை வியாபாரிக்குரிய விநியோக விலையை விட 1.50சதம் அதிகமாக விநியோகிக்கப்படுகின்றது. அதாவது புலிகளின் வரியைவிட மேலும் ஒருபோத்தலுக்கு ஒரு

## குளிர்பானத்தில் மொத்த வியாபாரிகளின் மோ...

இணைந்த நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஏற்ற ஒரு அலுவலகம் அமைத்துகொடுக்கப்படவில்லை. இவ் அதிகார சபையின் அலுவலர்க்கும் எதுவித வசதியும் செய்துகொடுக்கப்பட்டதாக அறிகுறிகளும் தென்படவில்லை என சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

இச்சபை தற்போதைய நிலைமையில் எமது மாவட்டத்திற்கு மிகமிக அத்தியாவசியமானது அதேபோல அதிகாரசபையில் இருக்கும் அலுவலரின் சேவையும் மிகவும் அத்தியாவசியமானதாகும்.

கள் செய்யப்பட்டிருந்தும் ஒரே ஒரு மேசையும் கதிரையும் தவிர எதுவித வசதிகளும் அவருக்கு செய்து கொடுக்கப்படவில்லை.

வி. அருட்செல்வம் என்ற இவ் அலுவலருக்கும் அவருடைய உயரதிகாரி திரு. சிவபாலன் என்பவருக்கும் ஒரே ஒரு மேசையும் கதிரையும் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலைமையை தொடர்ந்து சகித்து கொள்ள முடியாத திரு. சிவபாலன் என்பவர் வெளிநாடு சென்றுவிட்டதாகவும் அவ்வதிகாரி தெரிவித்துள்ளார். (லோ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்கொலைகள் அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மதுபோதையில் வந்த வயோதிபர், மனைவிசமையல் செய்யவில்லை என கோபம் கொண்டார்.

மனைவிக்கு அடித்து விட்டு வயல் வாடி சென்று களைநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இறந்தவர் வட்டுவான் வாசியான மா. கதிர்காமத்தம்பி (65) என்பவர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆபரேஷனுக்கு பயந்த வாலிபர் அலரிப்பருப்பு சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் அண்மையில் தளவாய் என்னுமிடத்தில் நடைபெற்றது.

இறந்தவர் கா. ஆனந்தன் (22) என்பவராவர்

ரம்ழான் பண்டிகை கொண்டாட குவைத்திலிருந்து மனைவி பணம் அனுப்பவில்லை என்பதால் கணவன் அளவிற்குஅதிகமான மாத்திரைகள் விழுங்கி உயிர்விட்டார்.

இச்சம்பவம் அண்மையில் மருதமுனையில் நடைபெற்றது.

இறந்தவர் எச். எல். பரீட் (35) என்பராவார்.

ரூபா 130 காணாமல் போனது தொடர்பாக தாய் மகள் மீது சந்தேகம் கொண்டார். இருவருக்குமிடையிலான தகராறு காரணமாக பருவமகள் அலரிகாய் சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இச் சம்பவம் அண்மையில் கரடியனாறு கிராமத்தில் நடைபெற்றது.

# பிரான்ஸ் வைத்திய அதிகாரிக்கு சேவை நலன் பாராட்டு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலையில் அரும் பெரும் சேவையாற்றியுள்ள பிரான்ஸ் வைத்திய சேவைக் குழு இணைப்பு உத்தியோகத்தர் செல்வி ஜக்குலின் (மருத்துவ தாதி) சேவையைப் பாராட்டி வைத்தியசாலையின் அபிவிருத்திச்சபைசேவை நலன் பாராட்டு விழாவொன்றை இம் மாதம் 13 ஆம் திகதி வைத்திய சாலையில் நடத்துகின்றது.

பருத்துறை மாவட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இச் சேவை நலன் பாராட்டு விழாவிலே பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப்பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் ஏ, துரைராஜா கலந்துகொள்வார்பள்.

யாழ். பல்கலைக்கழக விலங்கியல் துறைத் தலைவர் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பரளர் திரு என் என். கனகசபை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் வடமராட்சி வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு வி. வேலும்மயிலும் வடமராட்சி தெற்கு மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு ஈ. ஐயாத்துரை, வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ரீ. சந்திரசேகரம் ஆகியோர் கொரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்திய இராணுவம் வடமராடசிப் பகுதியில் தமது அடாவடித்தனங்களை கட்டவிழ்த்து கொண்டு வன்முறைகளை மோற்கொண்டபோது இப்பகுதி பக்களுக்கு பிரான்ஸ் வைத்திய சேவைக்குழு இணைப்பு உத்தியோகத்தர் செல்வி ஜக்குலின் மேற்கொண்ட உயிர்காப்பு நடவடிக்கைகளை இப்பகுதி மக்கள் உயிர் உள்ள வரையும் மறக்கமாட்டார்களென வைத்தியசாலை அபிவிருத்திச்சபை ஈழநாதத்திற்குக் தெரிவித்துள்ளது.

(25)

# வியாபாரிகள் கொள்ளை லாபம்

1983 ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழ் பிரதேசங்கள் எங்கும் வாழ்கைச் செலவு விஷம் போல் ஏறியுள்ளது. இலங்கையில் பொதுவாகவே இக்காலப்பகுதியில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி, இராணுவச் செலவீடு, அன்னியச் செலவாணி பற்றாக்குறை போன்றபல அம்சங்களில் இவ் வாழ்க்கை செலவு அதிகரித்திருப்பினும், வடக்கு கிழக்கில் ஏற்பட்ட அதிகரிப்பு மிகவும் உயர்வானதாகும்.

வடக்கு கிழக்கில் இவ்விலையேற்றங்களுக்குப் பொதுவாக கூறப்பட்ட காரணங்கள், போக்குவரத்துச் செலவு அதிகரிப்பு, இராணுவம், பொலிஸ் என்பனவற்றிற்கு கையூட்டுக் கொடுத்தல் இயக்கங்களுக்குக் காசு கொடுத்தல் என்ற மூன்று அம்சங்களுமாகும்.

போக்குவரத்து செலவு அதிகரிப்பிற்கு முக்கியமாக வைக்கப்பட்ட காரணங்கள் எரிபொருள் கட்டுப்பாட்டு விலையில் வாங்க முடியாமல் இருத்தல், லொறிச் சாரதிகள், கிளினர்களுக்கு பெரும் அளவில் கூலி கொடுத்தல் போன்ற காரணிகள் ஆகும்.

இதைத்தவிர உயிரையும், உடைமையையும் பணயம் வைத்தே போக்குவரத்தைச் செய்ய வேண்டியுள்ளதாலும் மூலதனத்திற்கு (லொறிக்கும்) உத்தரவாதம் இன்மையால் பொருந் தொகை பணம் அறவிடவேண்டியுள்ளது என்பதும் ஆகும்.

அடுத்ததாக வைக்கப்பட்ட காரணி பிரதான வீதியொங்கும் பரந்து கிடந்த ஒவ்வொரு பொலிஸ் இராணுவ முகாங்களிலும் தரிக்கும் போது அவர்களுக்குக் கையூட்டுக் கொடுக்க வேண்டும் இதனால் பெருந்தொகை செலவாகின்றது என்பதாகும்.

அடுத்தகாரணியானதுஇயக்கங்களுக்கு வாரி வழங்கவேண்டியுள்ளது என்பதாகும். பல இயக்கங்கள் இருந்த வேளையில் எல்லோருக்கும் கொடுக்க வேண்டியிருந்ததால் முதலாளிகளால் ஒன்றும் செய்ய முடியாமல் மக்களிடம் அவற்குரிய சுமைகள் சுமத்தப்பட்டது என்பதாகும். ஆனால் சில முதலாளிகள் இவர்களுக்கு குறிப்பிடக்கூடிய தொகைகளை வழங்கியது உண்மையாயினும் பல முதலாளிகள் ஒரு இயக்கத்தைச் சாட்டி மற்றைய இயக்கத்திடம் தப்பித்துக் கொண்ட சம்பவங்களே அதிகம்.

இவ்வாறான காரணங்கள் கூறப்பட்டு பொருட்களின் விலை வடக்கு, கிழக்கில் அபரிதமாக ஏற்றப்பட்டது. அவ்வேளையில் நாட்டில் இருந்த பாரிய நெருக்கடியினால் முதலாளிகளின் அபரிதமான விலையேற்ற நடவடிக்கைகளை மக்களும் ஏனையவர்களும் பொறுத்துக் கொண்டதாகத்தெரிகின்றது.

அதேவேளை வடக்கு, கிழக்கில் இன்றும் அன்றிருந்தது போன்று விலைகள் காணப்படுவதும்,அவற்றில்எந்தவிதக் குறைவும் ஏற்படாமல் இருப்பதும்தான் ஆச்சரியம் அளிக்கும் அம்சமாக இருக்கின்றது. ஆனால் அன்று சொன்ன காரணங்கள் எதுவும் இன்று பொருத்தப்பாடு உடையது அல்ல. ஒரு காரணத்தை மட்டும் முணுமுணுத்துக் கொள்கிறார்கள் புலிகள் வரி அறவிடுகின்றார்கள் என்று.

ஆனால் இதன் உண்மைத் தன்மை என்ன? புலிகள் சில பொருட்களுக்கு வரி அறவிடுவது என்பது உண்மைதான். அதைப் புலிகளும் மறுக்கவில்லை. தாம் சில பொருட்களுக்கு எவ்வளவு வரி அறவிடுகிறோம் என்பதைப் புலிகள் வெளிப்படையாகவே கூறத்தொடங்கிவிட்டார்கள்.

இன்று புலிகளின் வரிக்கும் விலை ஏற்றத்திற்கும் இடையில் நெருக்கமான தொடர்பு எதுவும் இருப்பதாக இல்லை.

எடுத்துக் காட்டாக குளிர்பானங்களின் விலைகளைக் கொள்ளலாம். குளிர்ப்பானங்களுக்கு புலிகளால் விதிக்கப்பட்ட வரி போத்தலுக்கு 50 சதம் ஆகும் ஆனால் நடைமுறையில் சாதாரணமாக ஒரு குளிர்ப்பானத்தின் விலை அதிகரிப்பு இரண்டு ரூபாவில் இருந்து மூன்று ரூபா வரையிலும் வேறுபடுகின்றது.

அதாவது சாதாரணமாக கொம்பனியின் விலைப் பட்டியலின் படி குளிர் பானங்களின் ஆகக்கூடிய சில்லறை விலை பொட்ளோ 4-70சதம், ஸ்பிறைற் 4-70 சதம், கொக்கோகோலா 4-70 சதம், பண்ரா 4-70 சதம், சோடா வோட்டர் (பிளேன் சோடா) 2-30 சதம், யானை மார்க் குளிர்ப்பானங்களாவன றெக்டோ 5 ரூபா ஒரேன்ஸ்கிறஸ் 4-90 சதம் ஆகும்.

அதேவேளைசாதாரணமாக கடைகளில் குளிர்பானங்களின் சில்லறை விலை ஏழு ரூபாவில் இருந்து 8 ரூபாவரை வேறுபடுகின்றது.

பொதுவாக சில்லறை விலையை ஒரு கொம்பனி நிர்ணயிக்கும் போது மொத்த வியாபாரிக்கு அதில் 15 வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட வீதத்திலும், சில்லறை வியாபாரிகளுக்கு 10 வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட வீதத்திலும் கழிவு கொடுப்பதுண்டு அதாவது அது வியாபாரிகளின் லாபமாகும். இதைவிட அவர்கள் மேலதிக லாபம் வைக்கக் கூடாது.

அத்தோடு சில்லறைகளாகவோ மொத்தமாகவோ இக் குளிர்ப்பானங்களை விநியோகிக்கும் பொறுப்பையும் கொம்பனிகளே ஏற்றுக் கொண்டுள்ளன.

அதாவது கொம்பனியில் இருந்து மொத்த வியாபாரியின் களஞ்சியத்திற்கோ அன்றி சில்லறை வியாபாரியின் வியாபாரமையத்திற்கோ கொண்டு வந்து கொடுக்கும் செலவைக் கொம்பனியே ஏற்றுக் கொள்கின்றது என்பதாகும்.

அப்படியாயின் குளிர்பானத்தைப் பொறுத்து யாழ்ப்பாணத்தில் இன்று நிலவும் நிலை என்ன? மொத்த வியாபாரிகள் பொதுவாக ரூ.5-50 சதத்திற்கும் ரூ.6 - 25 சதத்திற்கும் இடையில் குளிர்பானங்களை விநியோகிக்கின்றார்கள். அதாவது பெப்சி,கொக்கோகோலா ரகத்தைச்சேர்ந்தகுளிர்பானங்களை ரூ.5.50சதம் அளவிலும் யானை ரகக் குளிர்பானங்கள் ரூ6.25 சதம் அளவிலும் விநியோகிக்கின்றார்கள். அதாவது கொக்கோகோலா குளிர்பானங்கள் ரூ 1.25சதம் அதிகமாக வைத்து விநியோகிக்கப்படுகின்றது. அதாவது புலிகளால் அறவிடப்படும் வரியை விட மேலதிகமாக இன்னும் 75சதம் அளவில் அறவிடப்படுவதோடு இச்சோடாக்களுக்குரிய ஏஜெண்டுக்கள் தமது களஞ்சியங்களில்வைத்தே அவற்றை விநியோகிக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதாவது சில்லறை விநியோகக்கூலியையும் அவர்கள் பெற்றுக் கொள்கின்றார்கள் என்பதாகும்.

இதேபோன்று யானைமார்க் குளிர்பானங்கள் விநியோகத்தர்களால் சராசரியாக 6 ரூபாவிற்கு சில்லறை வியாபாரிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றது. சில்லறை வியாபாரிக்குரிய விநியோக விலையை விட 1.50சதம் அதிகமாக விநியோகிக்கப்படுகின்றது. அதாவது புலிகளின் வரியைவிட மேலும் ஒருபோத்தலுக்கு ஒரு ரூபா கூடுதலாக வைக்கப்படுகின்றது. இவ் யானை மார்க் குளிர்பானங்களையும் அனேகமாக சில்லறை வியாபாரிகள், விநியோகத்தர்களின் களஞ்சியங்களுக்குச் சென்றே பெற வேண்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை கொக்கோக்கோலா ரகத்தைச் சேர்ந்த குளிர்பானங்களாயினும்

ஜெயா

யானை ரகத்தைச் சேர்ந்த குளிர்பானங்களாயினும் சில்லறை வியாபாரிகள் அநேகமாக 7.50சதம் அல்லது8ரூபாவிற்கு விற்கின்றார்கள். அதாவது சராசரியாக சோடா ஒன்றிற்கு இரண்டு ரூபா அளவில் இலாபம் வைக்கின்றார்கள்.

சில்லறை வியாபாரிகள் தமக்கு குளிர்பான விநியோகஸ்தர்கள் கடைகளுக்கு கொண்டு வந்து தராமையால் தமக்கு ஒரு போத்தல் சோடாவிற்கு 50சதம் போக்குவரத்துசெலவு மேலதிகமாகப் பிடிக்கின்றது என்றும் குளிரூட்ட 50 சதம் பிடிக்கின்றது என்றும் குறிப்பிடுகின்றார்கள்.

ஆனால் இவையும் ஏற்புடைய கருத்தாக இல்லை. அவர்கள் விநியோகஸ்தர்கள்குளிர்பானங்களைக் கொண்டுவந்து விநியோகிக்கும்படி வற்புறுத்த வேண்டும் அல்லது கொம்பனியுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவேண்டும். அதைவிடுத்து விலையை விரும்பியவாறு ஏற்றலாம் என்றரீதியில்விலை

(5 ஆம் பக்கம் பார்க்க)

## குளிர்பானத்தில் மொத்த வியாபாரிகளின் மோ[redacted]

| | மிக உயர்ந்த சில்லறை விலை | சில்லறை வியாபாரிக்கு விநியோகிக்க வேண்டிய விலை (10% கழிவுடன்) | தற்போது விநியோக விலை | மேலதிகம் |
|---|---|---|---|---|
| கொக்கோகோலா ரகம் | ரூ. 4. 70 சதம் | ரூ. 4. 25 சதம் | ரூ. 5. 50 சதம் | ரூ. 1.25 சதம் |
| யானை ரகம் | ரூ. 5. 00 | ரூ. 4. 50 சதம் | ரூ. 5. 75 சதத்தில் இருந்து ரூ. 6. 00 வரை | ரூ. 1. 25 சதத்தில் இருந்து ரூ. 1. 50 சதம் வரை |

போத்தலுக்கு, புலிகளுக்கு 50 சதம் போக முதலாளிக்கு மேலதிகமாகச் சேருவது 75 சதத்தில் இருந்து 1ரூபா வரை—

## சில்லறை வியாபாரிகளின் மோசடி

| | வாங்கும் விலை | விற்கும் விலை | மேலதிகம் |
|---|---|---|---|
| கொக்கோகோலா ரகம் | ரூ. 5. 50 சதம் | ரூ. 7.50 சதத்தில் இருந்து 8 ரூபா வரை | 2ரூபாவில் இருந்து ரூ 2. 50 சதம் வரை |
| யானை ரகம் | ரூ. 5. 75 சதத்தில் இருந்து ரூபா6.[redacted]0 | ரூ. 7. 50 சதத்தில் இருந்து 8 ரூபா வரை | 2.ரூபாவில் இருந்து ரூ. 2. 25 சதம் வரை |

# "தமிழ் முதலாளிகளால் தமிழ் தொழிலாளர் அடக்கி ஒடுக்கப்பட்டு வருவது கவலைக்குரியது"

(சாவகச்சேரி)

இன்று நிலவும் இந்த அமைதியான சூழ்நிலையிலும் கூட சாவகச்சேரி வர்த்தகர் சங்கத்தால் தீர்மானிக்கப்பட்ட சாவகச்சேரி வர்த்தக நிலையங்களுக்கான ஒன்றரை நாள் விடுதலையை வர்த்தகர்கள் ஏன் நடைமுறைப்படுத்தக் கூடாது?

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சாவகச்சேரிப் பகுதி அமைப்பாளர் திரு. கந்தன் மேற்கண்டவாறு ஓர் வினாவை எழுப்பினார்.

சாவகச்சேரி வர்த்தகர் சங்க தலைவர் திரு. கே. தவராஜசிங்கம் தலைமையில் வர்த்தகர் சங்க கூட்டம் நடைபெற்றது.

திரு. கந்தன் மேலும் பேசுகையில்:

சாவகச்சேரி வர்த்தகர் சங்கம் வர்த்தக நிலைய ஊழியர்களுக்காக ஒன்றரை நாள் லீவு கொடுக்க தீர்மானித்தது

இந்த அடிப்படையிலே சனி அரைநேரமும், ஞாயிறு முழுநேரமும் வர்த்தக நிலையங்கள் மூடுவது என கூட்டத்தில் தீர்மானித்தது. ஆனால் சகல வர்த்தக நிலையங்களும் இதற்கு ஒத்துழைப்பு கொடுத்து இதை அமுல் செய்ய தவறுவதையிட்டு நாம் கவலையடைகிறோம்.

கடந்த காலங்களில் இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பின்போது வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் கூட வியாபார நிலையங்கள் திறக்க முடியாத நிலை நிலவியது. அப்பொழுதெல்லாம் பொறுத்திருந்த வர்த்தகர்கள் இப்பொழுது சனி அரைநேரமும், ஞாயிறு முழுநேரமும் கடைகளை ஏன் மூடக்கூடாது ஊழியர்களுக்கு ஏன் ஓய்வு கொடுக்கக் கூடாது.

வர்த்தகர்கள் மத்தியில் ஒற்றுமை வேண்டும். ஒத்துழைப்பு வேண்டும். இதன் மூலம் எமது இனத்தின் ஒற்றுமையையும் வலுப்படுத்த முடியும். மேலும் வர்த்தக நிலையங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களை திடீர் வேலை நீக்கம் செய்யப்படும் சம்பவங்களும் இடம் பெறுகின்றன. இது அப்பாவித் தொழிலாளர்களை மிகவும் பாதிக்கிறது.

தமிழினம் அடக்கி ஒடுக்கப்படுகிறது. இப்படி அடக்கி ஒடுக்கப்படுவதை சகிக்காமல் சுயநிர்ணய உரிமை கோரி போராட்டத்தை மேற்கொண்ட நாம் தமிழ் முதலாளிகளால் தமிழ் தொழிலாளர்கள் அடக்கி ஒடுக்கப்படுவதைப் பார்த்து சகித்துக் கொள்ள முடியுமா? இது தவறு. இதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த வர்த்தகர் சங்கம் உட்பட சகல சங்கங்களும் ஒழுங்கான முறையில் திறம்படச் செயற்படுவதின் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் வெற்றிக்கும் உறுதுணையாக அமையும்.

பல வியாபார நிலைய சொந்தக்காரர்கள் சைக்கிள்கள் பற்றி பல கோணங்களில் புகார் தெரிவித்துள்ளனர். கடை வாயிலிலும், வீதி ஓரங்களிலும் கண்டபடி சைக்கிள்கள் நிறுத்தப்படுகின்றன.

இதனால் வீதிப்பாதுகாப்புக்கு இடைஞ்சல் ஏற்படுவதாக கூறப்பட்டது. எனவே நாம் சைக்கிள் பாதுகாப்பை பொறுப்பேற்றுள்ளோம் இனி மேல் அந்த அசௌகரியங்கள் ஏற்படாது என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பிரதேச நிதிப் பொறுப்பாளர் திரு. சவுந்தன் பேசுகையில் வர்த்தகர் சங்கத்தின் தீர்மானப்படி சனி அரை நேரமும், ஞாயிறு முழு நேரமும் கடைகள் மூடப்பட வேண்டும் சகல வர்த்தகரும் ஒன்றுபட்டு நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்றார். (35)


ஸ்கை வீடியோ மூவிஸ்
நவாலி வீதி, ஆனைக்கோட்டை

வீடியோ படப்பிடிப்பு
கலர் படப்பிடிப்பு
கறுப்பு வெள்ளை படப்பிடிப்பு
பாடல் பதிவு
வீடியோ கசற் வாடகைக்கும் பெற்றுக் கொள்ள

Sky Video Movies
Navaly Road, Anaicoaddai
(B 684)



NEW BECON
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்
காலை நேர வகுப்புகள்


## தச்சுத் தொழில் உரிமையாளர் சங்கம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட தச்சுத் தொழிற்சாலை உரிமையாளர் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

இவ் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தச்சுத்தொழிற்சாலைகள் எதிர்நோக்கும் தொழில் ரீதியான நெருக்கடிகள் பற்றி ஆராயப்பட்டன.

சங்கத்தில் அங்கத்தவர்களாக சேர விரும்புவோர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கத்தலைவர் திரு. மு. ஜெகதீசன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

## கல்லாறு வலய தமிழ்தின விழா

(கல்லாறு)

துறைநீலாவணை, கோட்டைக்கல்லாறு, பெரியகல்லாறு. பாடசாலைகளை உள்ளடக்கிய கல்லாறு வலய தமிழ்தினவிழா போட்டிகள் வலய அதிபர் திரு. பொ. ஆனந்தராசா தலைமையில் பெரியகல்லாறு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. (45)

## ஆட்சிக்குழு கூட்டம்

(கொழும்புத்துறை)

உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம் இலங்கைக்கிளையின் ஆட்சிக்குழுக் கூட்டம் இன்று 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் இரண்டு மணிக்கு அதன் தலைவர் சட்டத்தரணி திரு ஸான். பூலோகசிங்கம் தலைமையில் இயக்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

# 1989இல் இலங்கை வங்கிக்கு 2020 லட்சம் ரூ. லாபம்

(கொழும்பு)

இலங்கை வங்கி 1989ஆம் ஆண்டு இரண்டாயிரத்து இருபதுலட்ச ரூபாவை இலாபமாக பெற்றுள்ளது என அதன் அறிக்கை தெரிவிக்கிறது.

1988இல் இதன் இலாபம் 155. 3 மில்லியன் ரூபாவாகும். இதனைவிட இவ்வாண்டு முப்பது சதவீதம் அதிகரித்துள்ளது.

வங்கியின் மொத்தவைப்பு 1988இல் 23. 5 மில்லியன் ரூபாவாக இருந்து 1989இல் 27. 8 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது.

இதேபோல் வங்கியின் மூலதன நிதி 1988இல் 972 மில்லியன் ரூபாவிலிருந்து 1989இல் 1032 மில்லியன் ரூபாவாக அதிகரித்ததால் ஒரு பில்லியன் குறிக்கு மேற்பட்டுள்ளது.

# விற்கப்படும் மீன்களில் புழுக்கள் காணப்படுகின்றன

(பொத்துவில்)

மீனினத்திற்கு நோய் பீடித்துள்ளபோதிலும். பொத்துவில் பகுதியில் மீன் விற்பனை குறையவில்லை.

பொத்துவில் பிரதேசத்தில் சந்தைப்படுத்தப்பட்டு வரும் கடல் மீனினத்திலும். களப்பு மீனினத்திலும் ஒருவகைப் புழுக்கள் காணப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்

மீன்களை அறுக்கப்பட்ட பகுதிகளில் எலுமிச்சம்பழத்தின் சாற்றினை ஊற்றிப் பார்த்தால், சிறிய அளவிலான புழுக்கள் வெளியேறுவதாய் பரீட்சித்துப் பார்த்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் சம்பந்தமாய் எந்தவொரு நடவடிக்கை எடுத்ததாகவோ, எடுக்கப் போவதாகவோ தெரியவில்லை, பொது சுகாதார பரிசோதகர் பரீட்சித்துப் பார்த்ததாகவோ ஊர்ஜிதமில்லை.

இதனால் இதனை அறியாத அப்பாவி மக்கள் குறைந்த விலையில் மீன் பெறுவதில் ஈடுபாடுடையவர்களாய் காணப்படுவதால் அதிகவிரைவில் நோய்த் தாக்கத்திற்குள்ளாக வேண்டிய நிலை ஏற்படலாமென அஞ்சப்படுகிறது

இதேவேளை கசாப்புக் கடைகளில் விற்பனைக்குட்படுத்தப்பட்டு வரும், இறைச்சிக்காக அறுக்கப்பட்டுவரும் கால்நடைகள் எவ்வித சுகாதாரப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவதில்லை என பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர். (54)

## புதிய குடிநீர்க் கிணறு

(நிந்தவூர்)

நிந்தவூர் அல்-மினா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கென சர்வோதய இயக்க கல்முனை மாவட்ட மத்திய நிலையம் குடிநீர்க் கிணறு ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது.

சர்வோதய இயக்க கல்முனை மாவட்ட இணைப்பாளர் திரு. கே. கனகரத்தினத்துடன் தொடர்புகொண்டு விடுத்த கோரிக்கையின் பயனாகவே இந்தக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. (53)

## வகுப்புக்கள்

(நிந்தவூர்)

நிந்தவூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள காரியாலயங்களிலும், பாடசாலைகளிலும் கடமை புரியும் உத்தியோகஸ்தர்களின் நலன் கருதி ஆங்கிலம், சிங்களம். அரபு கற்கை நெறிக்கான பகுதிநேர பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவிருக்கின்றன.

வார நாட்களில் பிற்பகல் மூன்று மணி முதல் நான்கு மணி வரை மேற்படி பயிற்சி வகுப்பை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. (53)

## புதிய மினிபஸ் சேவை

(புங்குடுதீவு)

புங்குடுதீவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவிற்கும் சேவையில் ஈடுபடும் தனியார் மினிபஸ்கள் கடந்த வாரம் முதல் புங்குடுதீவு பிரதான வைத்திய சாலைக்கு சென்றே சேவையை மேற்கொள்கின்றன.

புங்குடுதீவின் பல பகுதி

## பொது அறிவுப்போட்டி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மாவட்ட பாடசாலைகளிடையே பொது அறிவுப் போட்டி ஒன்றை நடாத்த தீர்மானித்துள்ளது.

க. பொ. த. (சா) வகுப்பு மாணவர்கள் தலா ஐந்து பேர் ஒவ்வொரு பாடசாலையின் சார்பிலும் கலந்து கொள்ளலாம். (37)

## பாண்டியன் குளத்தில் கலை நிகழ்ச்சி

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் ஆதரவுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இந்திய வம்சாவளி மலையக தொழிலாளர்களும், தெங்கு பனம்பொருள் உற்பத்தி கூட்டுறவு சங்க ஊழியர்களும் இணைந்து பாண்டியன்குளம் பாடசாலை மைதானத்தில் மாபெரும் கூட்டமும் இரவு கலை நிகழ்ச்சியும் நடாத்தினார்கள்.

திரு. மு. காளிமுத்து தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு விடுதலைப் புலிகள் சார்பாக பிரதேச பொறுப்பாளர் ஜொனி பாண்டியன்குளம் பொறுப்பாளர் முகிலன் மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் சி. சுந்தரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக உரை நிகழ்த்தினார்கள்.

## முத்திரை இல்லாத தபாலகம்

(அட்டாளைச்சேனை)

அக்கரைப்பற்று பிரதான தபாற்கந்தோரில் பதினொரு ரூபாய், ஒரு ரூபாய் முத்திரைகள் இல்லையென தபாற்கந்தோர் உத்தியோகஸ்தர்கள் கைகளை விரிக்கின்றனர். (46)

## கோழி நோய்

(வேலணை)

வேலணைப்பகுதியில் நிலவி வருகின்ற வரட்சி காரணமாக கோழிகளுக்கு நோய்கள் ஏற்பட்டு கோழிகள் இறந்து வருகின்றன.

இதனால் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள ஏழை மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இந்நோயை உடன் கட்டுப்படுத்த கால்நடை வைத்தியதிகாரி உடன் நடவடிக்கை எடுத்துதவ வேண்டுமென கோழி வளர்ப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர். (14)

## கடல் கொந்தளிப்பு

கடந்த மூன்று நாட்களாக கல்குடா, களுவன்கேணி, முகத்துவாரம், புன்னைக்குடா ஆகிய கடற்பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை.

கடல் கொந்தளிப்பு, கால நிலை சீரின்மை ஆகிய காரணங்களினாலேயே மீனவர்கள் தொழிலுக்கு செல்லவில்லை.

## ஆச்சிரமம்

(அக்கரைபற்று)

அக்கரைப்பற்று தென்பகுதி குடியேற்றக் கிராமமான 'டயஸ்' கிராமத்தில் ஸ்ரீகாயத்திரி ஆச்சிரமம் ஒன்றை அமைக்கும் வேலைகளில் இப்பகுதித் தொண்டர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இந்த ஆச்சிரமத்திற்கான

## Sky Video Movies

Navaly Road, Anaicoaddai

(B 684)



## NEW BECON

ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்

காலை நேர வகுப்புகள்

**PAPER CLASS**

துரித மீட்டல் வினாவிடை வகுப்பு
வர்த்தகம்; திரு. ஜெயராமன்
அளவையியல்; திரு. விக்கி
தமிழ்; செல்வி மீரா

**ஆரம்பம்: 14 - 05 - 1990**

திங்கள் காலை 6. 30 மணிக்கு
(சனி/ ஞாயிறு வகுப்புகளும் ஆரம்பமாகின்றன)

(R/473)



## உதவித் தாதியர் பயிற்சி நெறி

## TRAINING FOR NURSES AIDE

19-5-90 இல் ஆரம்பமாகவுள்ளன

1. தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N. O) விரிவுரைகள் நடைபெறுகின்றன
2. பதினெட்டு மாதகால பாடத்திட்டங்கள் ஆறுமாதகால செய்முறைப் பயிற்சிகள்
3. செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ்நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்தியசாலையில் நடைபெறுகின்றன
4. அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
5. பாடத்திட்டங்கள் யாவும் தமிழ் மொழிமூலம் போதிக்கப்படுகின்றன
6. இலவச ''அக்குபங்சர்'' பயிற்சிகள்

உங்கள் பதிவுகட்கு:-

அதிபர்

Dr. V. P. சுந்தரராஜன்

**சாயி மெடிக்கல் அக்கடமி**

இல 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

B.694


நடைபெறவுள்ளது.

# 1989இல் இலங்கை வங்கிக்கு 2020 லட்சம் ரூ. லாபம்

(கொழும்பு)

இலங்கை வங்கி 1989ஆம் ஆண்டு இரண்டாயிரத்து இருபதுலட்ச ரூபாவை இலாபமாக பெற்றுள்ளது என அதன் அறிக்கை தெரிவிக்கிறது.

1988இல் இதன் இலாபம் 155. 3 மில்லியன் ரூபாவாகும். இதனைவிட இவ்வாண்டு முப்பது சதவீதம் அதிகரித்துள்ளது.

வங்கியின் மொத்தவைப்பு 1988இல் 23. 5 மில்லியன் ரூபாவாக இருந்து 1989இல் 27. 8 மில்லியன் ரூபாவாக அதிகரித்தது.

இதேபோல் வங்கியின் மூலதன நிதி 1988இல் 972 மில்லியன் ரூபாவிலிருந்து 1989இல் 1032 மில்லியன் ரூபாவாக அதிகரித்ததால் ஒரு பில்லியன் குறிக்கு மேற்பட்டுள்ளது.

# இளைப்பாறும் ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவேண்டும்

(தீவுப்பகுதி)

ஆசிரியர்கள் தங்கத்துடன் ஒப்பிடக்கூடியவர்கள். தங்கம் எப்போதும் பிரகாசமாக ஒளிவீசிக்கொண்டேஇருக்கும். அதன் பெறுமதி என்றைக்கும் குறையாது. அதே போலவே இளைப்பாறும் ஆசிரியர் திரு. மாணிக்கவாசகர் ஆற்றிய பணி வேலணைக்கு மட்டுமல்ல முழுத் தீவகத்திற்குமே பெருமை தரக்கூடிய விடயமாகும். ஆசிரியர்கள் ஓய்வு பெறுகின்றார்கள். அல்ல இளைப்பாறுகின்றார்கள். இளைப்பாறும் ஆசிரியர்களது பங்களிப்பு தீவகத்திற்கு என்றும் தேவை.

மேற்கண்டவாறு வேலணை கிழக்கைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியரும் சமூக சேவையாளருமாகிய திரு. ச. மாணிக்கவாசகருக்கு வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்தில் அவ்வூர் மக்களால் நடாத்தப்பட்ட சேவை நலம் பாராட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய வேலணைக் கோட்டக் கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் தெரிவித்தார்.

வேலணை மகா வித்தியாலய அதிபர் திரு. சோ. வடிவேலு தலைமையில் இவ்வைபவம் இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தீவக அரசியல் பொறுப்பாளர் திரு. வி. சஸ்ரோ மங்கள விளக்கை ஏற்றி வைத்தார்.

வரவேற்புரையைவேலணை கிழக்கு மகா வித்தியாலய அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு. ஆ. கருணாகரன் நிகழ்த்தினார். வேலணை பெருங்குளம் ஸ்ரீ. முத்துமாரி அம்மன் தேவஸ்தானப் பிரதம குரு சிவஸ்ரீ நா. யோதீஸ்வரக் குருக்கள் அன்னாருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

வேலணைக் கோட்டக்கல்வி அதிகாரி திரு. சு. சண்முகநாதன் பாராட்டுரை வழங்குகையில் திரு. மாணிக்கவாசகர் ஆசிரியர் தனக்காக வாழாது பிறருக்காக வாழ்ந்து வருபவர் என்றார்.

(15)

வார நாட்களில் பிற்பகல் மூன்று மணி முதல் நான்கு மணி வரை மேற்படி பயிற்சி வகுப்பை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. (53)

# புதிய மினிபஸ் சேவை

(புங்குடுதீவு)

புங்குடுதீவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவிற்கும் சேவையில் ஈடுபடும் தனியார் மினிபஸ்கள் கடந்த வாரம் முதல் புங்குடுதீவு பிரதான வைத்திய சாலைக்கு சென்றே சேவையை மேற்கொள்கின்றன.

புங்குடுதீவின் பல பகுதிகளிலிருந்து வரும் ஏராளமான நோயாளிகளின் பிரயாண கஷ்டத்தை நீக்கும் முகமாக மேற்கொள்ளப்படும் இச்சேவையை இப்பகுதி மக்கள் பெரிதும் வரவேற்றனர்

புங்குடுதீவு அரசினர் வைத்தியசாலை அபிவிருத்தி சபை தலைவர் டாக்டர் எஸ். பஞ்சலிங்கத்தின் முயற்சியினாலேயே மேற்படி சேவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(22)

# சிரமதானம்

(வந்தாறுமூலை)

செங்கலடி சர்வோதைய பிரதேச நிலையத்தின் கீழ் உள்ள செங்கலடி செங்கதிர் சர்வோதைய பாலர் பாடசாலையில் மே தினம் அன்று காலை சிரமதானம் நடைபெற்றது.

மேற்படி சிரமதானத்திற்கு செங்கலடி சர்வோதைய பிரதேச இணைப்பாளர் திருமதி புஸ்பா சண்முகலிங்கம் அப்பகுதி சிரமதான இணைப்பாளர் செல்வி ந. நவநந்தினி சிறுவர்சேவைப் பொறுப்பாளர் ஏ. சந்திரா அவர்களும் கலந்துகொண்டனர் ஐம்பதுக்கு மேற்பட்ட தொண்டர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

(29)

# பாலர் பாடசாலை

(நிந்தவூர்)

நிந்தவூர்ப் பகுதியிலுள்ள பின்தங்கிய பிரதேச வறிய பாலர்களின் நலன்கருதி இரு பாலர்பாடசாலைகள் திறந்து வைக்கப்படவிருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளால் நிந்தவூர் வெளவாலோடைப் பிரதேசத்திலும், அட்டப்பள்ளப் பகுதியிலும் இந்தப் பாலர் பாடசாலைகள் திறக்கப்படவிருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிந்தவூர்ப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. விக்ரம் இதற்கான ஆரம்ப முயற்சிகளை எடுத்து வருகின்றார்.

(53)

உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இந்திய வம்சாவளி மலையக தொழிலாளர்களும், தெங்கு பனம்பொருள் உற்பத்தி கூட்டுறவு சங்க ஊழியர்களும் இணைந்து பாண்டியன்குளம் பாடசாலை மைதானத்தில் மாபெரும் கூட்டமும் இரவு கலை நிகழ்ச்சியும் நடாத்தினார்கள்.

திரு. மு. காளிமுத்து தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு விடுதலைப் புலிகள் சார்பாக பிரதேச பொறுப்பாளர் ஜொனி பாண்டியன்குளம் பொறுப்பாளர் முகிலன் மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் சி. சுந்தரன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக உரை நிகழ்த்தினார்கள்.

மற்றும் தெங்கு பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவு சங்க தலைவர் ந. ஆறுமுகம் கிராமசேவை உ. சு. பசுபதிப் பிள்ளை தொழிலாளர் சங்க செயலாளர் சி. சுப்பிரமணியம் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். (49)

# எயிட்ஸ் கருத்தரங்கு

(வந்தாறுமூலை)

கடந்த 29ஆம் திகதி அன்று மட்டக்களப்பு அரசடி மகா வித்தியாலயத்தில் எயிட்ஸ் நோய் பற்றிய கருத்தரங்கு மட்டக்களப்பு மாவட்ட குடும்ப திட்டமிடல் அதிகாரி அவர்களினால் நடத்தப்பட்டது.

இக் கருத்தரங்கில் பிரதம பேச்சாளராக டாக்டர் வைத்திய முருகானந்தன் வெனடிற் பிரதிப்பணிப்பாளர் - பயிற்சி ஆகியோர் கலந்து கொண்டனர். மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சகல பொது சுகாதாரப் பரிசோதகர்களும் மருத்துவ மாதுக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

(29)

கல்குடா, கழுவன்கேணி, முகத்துவாரம், புன்னைக்குடா ஆகிய கடற்பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை.

கடல் கொந்தளிப்பு, காலநிலை சீரின்மை ஆகிய காரணங்களினாலேயே மீனவர்கள் தொழிலுக்கு செல்லவில்லை.

# ஆச்சிரமம்

(அக்கரைபற்று)

அக்கரைப்பற்று தென்பகுதி குடியேற்றக் கிராமமான 'டயஸ்' கிராமத்தில் ஸ்ரீகாயத்திரி ஆச்சிரமம் ஒன்றை அமைக்கும் வேலைகளில் இப்பகுதித் தொண்டர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இந்த ஆச்சிரமத்திற்கான அடிக்கல்லை உலக ஆன்மீக மன்றத் தலைவரும் காயத்திரி சித்தரும் நுவரேலியா ஸ்ரீலங்காதீஸ்வர ஆலய ஸ்தாபகருமாகிய சுவாமி ஆர். கே. முருகேசு சுவாமிகள் நாட்டிவைப்பார்.

இங்கு அமைக்கப்படவிருக்கின்ற ஆச்சிரமம் சுமார்பத்து ஏக்கர் விஸ்தீரணத்தில்தியான அறை, சமயசொற்பொழிவு அறை, யாத்திரீகர்கள் தங்கு மடம் என்பன அமையவிருப்பதாக காயத்திரி தொண்டர் ஒருவர் தெரிவித்தார்.

# ஆலய திருவிழா

(புங்குடுதீவு)

புங்குடுதீவு மத்திய புனித சவேரியார் ஆலய வருடாந்த உற்சவம் 11ஆம் திகதி வெள்ளிக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது பத்து நாட்களுக்கு நடைபெறும் இவ்விழா ஒன்பதாம் நாளான இம் மாதம் 19ஆம் திகதி நற்கருணை வழிபாடு நடைபெற்று மறுநாட்காலை விஷேட திருப்பலி பூஜையும் புனித சவேரியாரின் திருச்சொரூப பவனியும் இடம் பெறும்,

(22


மானிப்பாயில். . .

தரம் தரமாக உங்கள் சிந்தைக்குகந்த வகையில்
தரமான புகையிலை,
திறமான சுருட்டுக்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும்
மளிகைச் சாமான்கள் அனைத்தும் கிடைக்கும்.

**நாதன் அன் பிறதர்ஸ்**

சந்தையடி, மானிப்பாய்.

(B 672)

### சிந்தனைக்கு

கூட்டத்தில் கூடி நின்று
கூவிப் பிதற்றலின்றி
நாட்டத்திற் கொள்ளாரடி - கிளியே
நாளில் மறப்பாரடி

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 14 - 05 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

## மீண்டும் அம்மையார் இனவாதம் கக்குகிறார்

''பழைய குருடி கதவைத் திறடி'' என்பதுபோல சிறிமாவோ அம்மையார் பழையபடி வகுப்புவாத விஷம் கக்கத் தொடங்கியிருக்கிறார்.

''நமது நாட்டின் மூன்றில் ஒரு பகுதியை அரசாங்கம் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்துவிட்டது. வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகளின் ஆட்சியே நடைபெறுகிறது. வடக்குக் கிழக்கில் நிலவும் இந்தச் சூழ்நிலையை நீக்குவதற்குத் தவறுமானால் இலங்கை அரசாங்கம் உடனடியாகப் பதவி விலக வேண்டும்.''

காலியில் கடந்த சனிக்கிழமை நடந்த ஐந்து கட்சிகளின் எதிர்க்கட்சிக் கூட்டணியின் பொதுக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவியும் உலகின் முதலாவது பெண் பிரதமர் என்று பெயர் பெற்றவருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பேசியபோது மேலே குறிப்பிட்டவாறு கூறியிருக்கிறார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றி பெற முடியாமல் போனதற்கு ஜே. வி. பி. யினரும் அன்றைய அரசின் அடக்குமுறை நடவடிக்கைகளுமே காரணம் என்றும் வயிற்றெரிச்சலைக் கொட்டியிருக்கிறார்.

இதிலிருந்து சிறிமாவோ அம்மையார் மீண்டும் பதவிக்கு வருவதுபற்றித் தான் கவலை கொண்டுள்ளார் என்பதும் தெளிவு.

சிறிமாவோ அம்மையாரின் சுதந்திரக்கட்சியுடன் இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி ஸ்ரீலங்கா மக்கள்கட்சி, தேசவிடுதலை மக்கள்கட்சி ஆகியவை கூட்டுச் சேர்ந்திருக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் லங்கா சமசமாஜக்கட்சியும் முன்னர் ஆட்சி அதிகாரத்தை அனுபவித்தன. இன்னும் இரண்டு குட்டிக் கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு ஆட்சிக்கு வருவதற்கு அம்மையார் நப்பாசை கொண்டிருக்கிறார்.

இரண்டு வருடங்களுக்கு மேலாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அந்நியப்படையான இந்திய இராணுவம் அராஜக ஆட்சி நடத்தியபோது சிறிமா அம்மையாரும் இன்று அவருடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் கட்சியினரும் எங்கே போயிருந்தார்கள்?

அந்நியப்படையொன்று இலங்கையின் மூன்றிலொரு பகுதியை ஆக்கிரமித்து வைத்திருக்கிறதே என்று ஏன் குரல் கொடுக்கத் துணிவு வரவில்லை?

# சொந்த மண்ணில் இன்றும் தமிழ் அகதி முகாங்கள்

தமிழீழ விடுதலைப் போராட்டம் 70களின் ஆரம்ப வருடங்களில் ஆயுதப் புரட்சியாக பரிணாம வளர்ச்சி பெற்றது. அரச இயந்திரமானது கெரில்லாப் போராட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் திண்டாடத் தொடங்கியது. விளைவு 58களில் எவ்வாறு அப்பாவித் தமிழ் மக்கள் பெண்கள் தாக்கப்பட்டு அகதிகளாய் வடக்கை நோக்கி விரட்டப்பட்டார்களோ அவ்வாறே வடக்கு கிழக்கிலும் தமிழர்கள் தாக்கப்பட்டார்கள் உடைமைகள் தீயிடப்பட்டன. விசேடமாய் கிழக்கு மாகாணத்தில் இருந்தும் வடக்கில் எல்லைப் புறங்களில் இருந்தும் தமிழர்கள் விரட்டப்பட்டார்கள்.

### தமிழீழப் போராட்டமும் அகதிகளும்

நீண்ட 45 வருடங்களாகத் திட்டமிடப்பட்ட அடிப்படையில் தமிழ்மக்கள் அகதிகள் ஆக்கப்படுவது தொடர்கின்றது. இன்றும்கூட தமது சொந்த மண்ணில் குடியேற முடியாமல் தஞ்சம் புகுந்த இடங்களிலேயே நிரந்தரமாகி விட்ட அவலம்தான் நிதர்சனமாய் இருக்கின்றது. தமது சொந்தக் கிராமங்களில் இழந்த வாழ்வை மீட்டுக் கொள்ள பணபலமும்–சேவை மனப்பான்மையுடன் செயற்படும் சமூகசேவை ஸ்தாபனங்களின் ஆதரவும் தேவை. தாமாகவே போய்க் குடியேறுவது பணபலமும், ஆற்றலும் உள்ளவர்கட்கே சாத்தியமானது. அடுத்தவேளை சோற்றிற்குத் திண்டாடும் – இரவுகள் விடியும் பொழுது நித்திரை விட்டெழுந்து பசியால் அழப்போகும் தமது குழந்தைகளுக்கு எதை உணவாகக் கொடுக்கலாம் என ஏங்கும் தாய்மார்கள் நிறைந்த பாட்டாளி மக்களால் மீளக் குடியமர்தல் சாத்தியமற்றதே.

### அகதிகளும் சமூகமும்

ஆனால் அண்மையில் முல்லைத்தீவுமாவட்டத்தில் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி பின்னர் திரும்பவும் அங்கே குடியேறச் செல்லாமல் தஞ்சமடைந்த இடங்களில் வாழ்பவர்களுடன் வாடுகிறார்கள். அந்நிய 'இராணுவமும், தேசத்துரோகிகளினாலும் இவர்களில் ஆண்களும் பெண்களும் பாதிக்கப்பட்டார்கள். கசிப்பு பருகி ஒழுக்கக் கேடான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றார்கள். இப்பிரதேசம் ஒரே குப்பையும் நாற்றமாயும் உள்ளது என சம்பந்தப்பட்டவர்கள் முகத்தைச் சுழிக்கின்றார்கள்.

### தமிழீழத்தின் உண்மையான குடிமக்கள்

யாழ்ப்பாணத் தெரு வீதிகளில் கடைகளில் - உணவு விடுதிகளில் குதூகலமும், புதியகளையும் காணப்படுகின்றன. தேசம் விடுதலை பெற்றுவிட்டது போன்றதொரு தோற்றம் தெரிகின்றது. கனடாவில் இருந்து தமிழர்கள் விடுமுறையில் வந்து நிற்கிறார்கள். 5 பவுண் சங்கிலிகள் ஆண்களின் கழுத்துக்களில் மின்னுகின்றன. நல்லூர் வீதிகளில் பட்டு வேட்டிகளுடன் பவனி வருகின்றார்கள். 'கல்யாணிகளிலும்' 'சுபாஸ்களிலும்' உணவருந்தி மகிழ்கின்றார்கள். இதனை மட்டும் பார்த்து யாரும் திருப்தி கொள்ள வேண்டாம். இந்தக் கடை வாசல்களில் உணவருந்தி விட்டு வருவோர்களின் கால்களைத் தொட்டு பிச்சை கேட்கும் குழந்தைகளின் முகங்களே தமிழீழத்தின் உண்மையான முகங்கள். இவர்கள்தான் எமது மக்கள். இந்த மண்ணோடு ஒன்றிப் போனவர்கள். வாகனங்களும் - குதிரைகளும் இவர்களுக்குக் கிடையாது. இந்த குழந்தைகளும்-பெற்றோர்களும் தமிழீழத்தின் மண்ணில் துயில்கின்றார்கள். மிகவேதனைக்குரிய நிகழ்ச்சியொன்று அண்மையில் என்னை மிகவும் வேதனைப் படுத்தியது.

வெளிநாட்டில் இருந்து திரும்பிய ஒரு இளைஞர் கழுத்தில் தங்கச் சங்கிலிகள் மின்னின, புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றில் தனது நண்பருடன் வந்து கஸ்தூரியார் வீதியில் உள்ள யாழ்.நகரின் பிரபல்யமான உணவு விடுதி ஒன்றினுள் நுழைந்து விட்டு வெளியே வந்தார். வாசலில் இருந்த குழந்தைகள் அவரிடம் பணம் கேட்டு அடம் பிடித்த பொழுது காலால் உதைத்து விட்டு, ''யாழ்ப்பாணத்தில் பிச்சைக்காரர்களின் தொல்லை கூடி விட்டது'' என்று கூறியபடியே மோட்டார் சைக்கிளில் மறைந்து விட்டார்கள்.

கூடியிருந்தோர் அவரது செயலைப்பாராட்டினார்கள். ''யாழ்.நகரில் இருந்து இவர்களை தூர இடங்களில் கொண்டுபோய் இறக்கி விட வேண்டும்'' என கருத்துத் தெரிவித்தார்கள். அவர்களினால் தான் இந்த நிலையை புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் இந்த மக்கள் கூட்டம் தான் விடுதலைக்கு மிக நெருக்கமானவர்கள் இழப்பதற்கு எதுவுமற்ற இவர்களே போராட்டத்திற்கு மிகமிகத் தகுதியானவர்கள். இந்த மண்ணைவிட்டு இவர்கள் தப்பியோடப் போவதில்லை. இங்கேயே நிரந்தரமாய் தங்கி வாழப் போகின்றவர்கள்.

திட்டமிடப்பட்டமுறையில் இந்தமக்களை ஸ்தாபன மயப்படுத்தி அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து சமூகத்தில் அடிப்படைத் தேவைகளோடு வாழ வைப்பது நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். இவர்கள் அணிதிரட்டப்பட வேண்டும் போராட்டத்தை நோக்கி நெறிப்படுத்தப்பட வேண்டும். குடும்பச் சண்டைகள், தூய்மையற்ற குடியிருப்புகள், கசிப்பு மதுபானபழக்க வழக்கங்களில் இருந்து இவர்கள் மீட்கப்பட வேண்டும். தமிழீழத்தின் உண்மையான குடிமக்கள் இவர்களே.

''போராட்டத்தை நோக்கி மக்கள் அணிதிரளாவிட்டால் தவறு மக்களிடமல்ல. போராட்டத்தை நெறிப்படுத்துபவர்களிடமே உள்ளது'' என்ற மாமனிதர் லெனினின் கூற்றை இவ்விடத்தில் நினைவு கூர்வது மிகப் பொருத்தமானதே.

**- பிறேம் -**

## ஊர்சுற்றி

### எழுதுவது

முற்காலத்தில் நாட்டை ஆண்ட மன்னர்கள் இரவில் மாறுவேடம் பூண்டு நகருக்குள் சென்று மக்களின் குறைகளை அறிந்து வந்து நிவர்த்தி செய்வார்களாம்.

''வீரபாண்டிய கட்டபொம்மன்'' திரைப்படத்திலும் பாஞ்சாலங்குறிச்சியில் கொள்ளையர் கூட்டம் இருப்பதாகக் கேள்விப்பட்டதும் கட்டபொம்மன் மாறுவேடம் பூண்டு சென்று கொள்ளையரை மடக்கிப் பிடிக்கும் காட்சி வருகிறது.

முந்தாநாளிரவுயாழ்.நகரில் ஆரியகுளம் சந்தியில் மதவருகே பஸ்வண்டிக்காக சில பெண்களும் ஆண்களும் காத்திருந்தார்கள். சில தினங்களாக ஆரியகுளம் சந்தியிலிருந்து பலாலி வீதியில் இருபக்கமும் ஜெகஜோதியாக ஒளி கொடுத்துக் கொண்டிருந்த ரியூப்லைற்றுக்கள்யாவும் அணைந்து இருள் சூழ்ந்திருந்தது.

இரவு சுமார் ஒன்பது மணியிருக்கும் நண்பரும் நானும் அப்பாதையால் வந்து கொண்டிருந்தோம் மூன்று நான்கு பேர் மது போதையில் சந்தியில் நின்று அட்டகாசம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். திடீரென ஒருவர் அருகேஇருந்த கடைக்குச் சமீபமாக இருந்துநெருப்புக் கொள்ளியுடன் வந்து நடுவீதியில் வேகமாக வீசியெறிந்தார். கீழே விழுந்த கொள்ளியிலிருந்து நெருப்புத்துண்டங்கள் காற்றில் அங்குமிங்கும் பறந்தன.

இந்தக் காட்சிகளைக் கண்டு பஸ்ஸிற்கு காத்திருந்தவர்கள் அரண்டு போய் நின்றார்கள்.

இதுபோன்ற அட்டகாசங்கள் ஆரியகுளம் சந்தியில் மட்டுமல்ல நகரில் சில இடங்களில் தினமும் நடைபெற்றுக்கொண்டு தானிருக்கின்றன.

மாநகரசபை ரியூப்லைற்றுக்களைப்பூட்டி நகருக்கு ஒளிகொடுக்கும் முயற்சியிலீடுபட்டு வருகிறது.

வெளிச்சத்தை இருளாக்கித் [illegible] எதுப்பறி திருட்டு [illegible] ல் ஈடுபடும் [illegible] 'பழைய சண்டித்தன' நடவடிக்கைகள் இன்னமும் இருக்கின்றணன் போல் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

தந்திக்கம்பித் திருட்டில் ஈடுபடுபவர்கள் பெரும்பாலும் சிறுவர்களாகவே இருக்கிறார்கள். நிச்சயம் இதன் பின்னணியில் யாரோ பெரிய புள்ளிகள் இருக்கவேண்டும்.

மாறுவேடம் போட்டாவது இவற்றைக் கண்டு பிடித்து அடக்க வேண்டும்.

★

'' இளம் விதவையின் கண்ணீர்'' என்ற தலைப்பில் மோ. இந்திராணி என்ற பெண்மணி எழுதியசோகக்கடிதமொன்று கடந்தமார்ச் மாதம் இருபதாம் திகதி வெளிவந்த 'ஈழநாதம்' பத்திரிகையின் 'மக்கள்மடல்'பகுதியில் வெளிவந்திருந்தது.

கனடாவிலுள்ள ஓரன்பருக்கு மட்டுமே இந்தக் கடிதம் மனதை உருக்கியிருக்கிறது. அங்குள்ள ஓர் அன்பர் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு உறவினருக்குக் கடிதம்எழுதி தாம் கனடாவில் ''ஈழநாதம்'' பத்திரிகையில் 'இளம் விதவையின் கண்ணீர்' என்ற கடிதத்தைப் பார்த்ததாகவும் அந்தப் பெண்ணின் முகவரியைப் பெற்று அனுப்புமாறும் தாம் தம்மால் இயன்ற உதவியைச் செய்ய விரும்புவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

உதவி செய்ய விரும்புபவர் 'ஈழநாதம்' மூலம் உதவி செய்யலாம்.

★

திருக்கோணமலைவித்தியாலயம் ஒழுங்கையைச் சேர்ந்த சீ. விஜயசுந்தரம் என்னும் அன்பர் எழுதியுள்ள கடிதம் இது:-

ஐயா.

உங்கள் பத்திரிகை எங்களுக்கு இப்பொழுது கிடைக்கிறது. மிகவும் நன்றாக இருக்கிறது உங்கள் ஆசிரியர் தலையங்கம்தான் நான் முதலில் வாசிப்பது. மிகவும் நன்றாக எழுதுகிறீர்கள் நேர்மையாக யாரும் கோபித்துக் கொள்வார்களோ என்று எண்ணாமல் உண்மையை எழுதுகிறீர்கள். உங்கள் நேர்மைக்கு என்னுடைய பாராட்டுக்கள் நீங்கள் இன்னும் நன்றாக துணிவுடன் எழுதுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன். உங்களுக்கும் உங்கள் ஈழநாதத்திற்கும் எனது வாழ்த்துக்கள்.

என்பதும் தெளிவு.

சிறிமாவோ அம்மையாரின் சுதந்திரக்கட்சியுடன் இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி ஸ்ரீலங்கா மக்கள்கட்சி, தேசவிடுதலை மக்கள்கட்சி ஆகியவை கூட்டுச் சேர்ந்திருக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் லங்கா சமசமாஜக்கட்சியும் முன்னர் ஆட்சி அதிகாரத்தை அனுபவித்தன. இன்னும் இரண்டு குட்டிக் கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு ஆட்சிக்கு வருவதற்கு அம்மையார் நப்பாசை கொண்டிருக்கிறார்.

இரண்டு வருடங்களுக்கு மேலாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அந்நியப்படையான இந்திய இராணுவம் அராஜக ஆட்சி நடத்தியபோது சிறிமா அம்மையாரும் இன்று அவருடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் கட்சியினரும் எங்கே போயிருந்தார்கள்?

அந்நியப்படையொன்று இலங்கையின் மூன்றிலொரு பகுதியை ஆக்கிரமித்து வைத்திருக்கிறதே என்று ஏன் குரல் கொடுக்கத் துணிவு வரவில்லை?

இலங்கையின் சட்டம் ஒழுங்கை சிறிதுகூட மதிக்காமல் டில்லியின் கட்டளைப்படி இலங்கையின் மூன்றிலொரு பகுதியை இந்திய இராணுவம் ஆட்சி செய்தபோது சிறிமா அம்மையாரும் இன்றைய அவரது சகபாடிகளும் ஏன் மூச்சுக்கூட விடவில்லை?

இந்திய இராணுவம் வடக்கிலும் கிழக்கிலும் ஆதிக்கம் செலுத்தியபோது சிறிமாஅம்மையாருட்பட தென்னிலங்கை அரசியல்வாதி எவராவது இந்தப்பக்கம் தலைகாட்ட முடிந்ததா?

1960 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடந்த பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிப் பிரதமராக வந்த சிறிமா அம்மையார் 1961 ஆம் ஆண்டில் தமிழரசுக் கட்சியினர் வடக்கிலும் கிழக்கிலும் அகிம்சை முறையில் சத்தியாக்கிரகம் மறியல் நடத்தி அரசயந்திரத்தை சில மாதங்கள் ஸ்தம்பிக்கச் செய்திருந்தபோது பேச்சுவார்த்தையில் நம்பிக்கை வைக்காமல் ஆயுதப்படைகளை ஏவிவிட்டே அடக்கினார்.

1970 ஆம் ஆண்டில் மீண்டும் ஆட்சிக்கு வந்தபோது புதிய அரசியலமைப்பைத் தயாரிக்கையிலும் தமிழ் மக்களின் கோரிக்கைகளைப் புறக்கணித்து இலங்கையை ஒரு குடியரசாக்கினார்.

ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் சுதந்திரகட்சியும் ஐக்கியதேசியக் கட்சியும் இனத்துவேஷத்தை வளர்த்து அதன் மூலம் ஆட்சிக்கு வந்தன.

இந் நாட்டில் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைகளாக்குவதற்கு இரு கட்சிகளுமே இனக்கலவரங்களைத் தூண்டி விட்டன; ஆயுதப் படைகளை ஏவிவிட்டன.

இதன் விளைவுதான் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு ஆயுதம் ஏந்துவதைத்தவிர வேறு வழியில்லை என்பதை உணர்ந்து தமிழ் இளைஞர்கள் ஆயுதந்தரித்தனர்.

அரசியல் 'சாணக்கியன்' என்று பெயர் எடுத்த ஜே. ஆர். தமிழ் இளைஞர்களுடன் தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் இந்தியப்படையைக் கொண்டுவந்து மாட்டிவைத்தார். அந்தப் படையும் போதும் போதும் என்று போய்விட்டது.

சிறிமா அம்மையார் இன்னும் பழைய நிலையிலேயே நிற்கிறார். அவருக்கு நாட்டின் இன்றைய நிலை இன்னமும் புரியவில்லை.

பொது மக்களுடன் நெருங்கிப் பழகியிராத சிறிமா அம்மையாருக்கு நிலைமை தெரியாதது விந்தையல்ல!

ஆனால் மக்களுடன் பழகுவதாக பாட்டாளி மக்களின் கட்சிகள் என்று கூறிக்கொள்ளும் கம்யூனிஸ்ட், சமசமாஜக்கட்சியினர்கூடவா அம்மையாருக்குநிலைமையைச் சொல்லிக் கொடுக்கக்கூடாது.

இன்னும் பழைய சிந்தனையில் அம்மையாரும் சகாக்களும் இருந்து மீண்டும் தமிழ் மக்களை அடிமைப் படுத்த நினைத்தால்—

''நாட்டின் எழுபத்தைந்து வீதமானவர்கள் இருபத்தைந்து வீதமானவர்களின் உரிமைகளை வழங்க மறுத்தால் இருபத்தைந்து வீதத்தையும் இழக்கநேரிடும்'' என்று ஜனாதிபதி பிரேமதாசா கூறியதையே சிறிமா அம்மையாருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

கவே போய்க் குடியேறுவது பணபலமும், ஆற்றலும் உள்ளவர்கட்கே சாத்தியமானது. அடுத்தவேளை சோற்றிற்குத் திண்டாடும் – இரவுகள் விடியும் பொழுது நித்திரை விட்டெழுந்து பசியால் அழப்போகும் தமது குழந்தைகளுக்கு எதை உணவாகக் கொடுக்கலாம் என ஏங்கும் தாய்மார்கள் நிறைந்த பாட்டாளி மக்களால் மீளக் குடியமர்தல் சாத்தியமற்றதே.

## அகதிகளும் சமூகமும்

ஆனால் அண்மையில் முல்லைத்தீவுமாவட்டத்தில் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி பின்னர் திரும்பவும் அங்கே குடியேறச் செல்லாமல் தஞ்சமடைந்த இடங்களில் வாழ்பவர்களுடன் உரையாடினேன். தாங்கள் பிறந்த வளர்ந்த மண்ணை விட்டு வெளியேறிய – வெளியேற்றப்பட்ட ஏக்கம் தெளிவாகத்தெரிந்தது. இதைவிட தஞ்சமடைந்த இடங்களில் தொழில் செய்யும் பொழுது உள்ளூர் கிராம வாசிகளின் அதிருப்தியை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.அத்துடன் இவர்கள் வேண்டாத அழையாத விருந்தாளிகள் ஆக்கப்பட்டு விட்டார்கள். உண்மைநிலை இவ்வாறிருக்க இந்த மக்களின் உணர்வுகளை சற்றும் புரிந்து கொள்ளாமல் தமது சொந்த இடங்களுக்கு இவர்கள் போக மாட்டார்கள் இங்கு வசதியாய் வாழ்கின்றார்கள் கசிப்புக் காய்ச்சவும் தமக்குள் சண்டையிடவும் மட்டுமே இவர்களுக்குத்தெரியும் இவர்களின் பிள்ளைகள் திருடர்கள் சமூகத்தினால் வேண்டப்படாதவர்கள் பாடசாலைகளில் சேர்த்தால்தமது பிள்ளைகளையும் பழுதாக்கி விடுவார்கள் இப்படியெல்லாம் விமர்சனம் செய்தார் சமூக சேவை பிரிவில் கடமையாற்றும் ஒருவர். இவர்களைப் போன்றவர்களே இன்று இம் மக்களுடன் தொடர்புகொண்டுள்ளார்ள் ஒரு தந்தையின் பரிவுடனும் ஆதரவுடனும் செயற்பட இவர்களினால் முடியாது.

இந்த மக்கள் தாமாக விரும்பி இவ்வாறு செயற்படவில்லையென்பதையும் சமூக நிர்ப்பந்தங்கள் தான் இந்த மக்களை இப்படி செயற்பட வைக்கின்றன என்பதையும் ஆழமான சிந்தனையினூடாக மட்டுமே புரிந்து கொள்ள முடியும் இன்று சமூக சேவையாளர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் இந்த மக்களின்பிரச்சினைகளை புரிந்து கொள்ளாமல் தண்டனைகளை வழங்கச் சிபார்சு செய்வதில் மட்டுமே முன் நிற்கின்றார்கள்என்பதே வேதனைக்குரிய உண்மை நிலையாய் உள்ளது.

நெடுங்கேணி பகுதியில் நகரினுள் நெல்லுச் சங்கத்தில் எந்த விதமான சுகாதார வசதிகளும் அற்ற நிலையில் 53 குடும்பங்கள் அகதிகளாய்

...கள். வாகனங்களும் - கதிரைகளும் இவர்களுக்குக் கிடையாது. இந்த குழந்தைகளும்-பெற்றோர்களும் தமிழீழத்தின் மண்ணில் துயில்கின்றார்கள். மிகவேதனைக்குரிய நிகழ்ச்சியொன்று அண்மையில் என்னை மிகவும் வேதனைப் படுத்தியது.

வெளிநாட்டில் இருந்து திரும்பிய ஒரு இளைஞர் கழுத்தில் தங்கச் சங்கிலிகள் மின்னின, புதிய மோட்டார் சைக்கிள் ஒன்றில் தனது நண்பருடன் வந்து கஸ்தூரியார் வீதியில் உள்ள யாழ்.நகரின் பிரபல்யமான உணவு விடுதி ஒன்றினுள் நுழைந்து விட்டு வெளியே வந்தார். வாசலில்

...னதும் கடமையாகும். இவர்கள் அணிதிரட்டப்பட வேண்டும் போராட்டத்தை நோக்கி நெறிப்படுத்தப்பட வேண்டும். குடும்பச் சண்டைகள், தூய்மையற்ற குடியிருப்புகள், கசிப்பு மதுபானபழக்க வழக்கங்களில் இருந்து இவர்கள் மீட்கப்பட வேண்டும். தமிழீழத்தின் உண்மையான குடிமக்கள் இவர்களே.

''போராட்டத்தை நோக்கி மக்கள் அணிதிரளாவிட்டால் தவறு மக்களிடமல்ல. போராட்டத்தை நெறிப்படுத்துபவர்களிடமே உள்ளது'' என்ற மாமனிதர் லெனினின் கூற்றை இவ்விடத்தில் நினைவு கூர்வது மிகப் பொருத்தமானதே.

...கும் பறந்தன.

இந்தக் காட்சிகளைக் கண்டு பஸ்ஸிற்கு காத்திருந்தவர்கள் அரண்டு போய் நின்றார்கள்.

இதுபோன்ற அட்டகாசங்கள் ஆரியகுளம் சந்தியில் மட்டுமல்ல நகரில் சில இடங்களில் தினமும் நடைபெற்றுக்கொண்டு தானிருக்கின்றன.

மாநகரசபை ரியூப்லைற்றுக்களைப்பூட்டி நகருக்கு ஒளிகொடுக்கும் முயற்சியிலீடுபட்டு வருகிறது.

வெளிச்சத்தை இருளாக்கித் [illegible] திருட்டு [illegible] ஈடுபடும் [illegible] 'பழைய சண்டித்தன' நடவடிக்கைகள் இன்னமும் இருக்கின்றனவா; அல்லது மீண்டும் தலைதூக்குகின்றனவா?

★

யாழ்.நகரில் தந்திக்கம்பி திருட்டு வெட்டவெட்டத் தளைக்கும் மயில் இராவ

ஐயா.

உங்கள் பத்திரிகை எங்களுக்கு இப்பொழுது கிடைக்கிறது. மிகவும் நன்றாக இருக்கிறது உங்கள் ஆசிரியர் தலையங்கம்தான் நான் முதலில் வாசிப்பது. மிகவும் நன்றாக எழுதுகிறீர்கள் நேர்மையாக யாரும் கோபித்துக் கொள்வார்களோ என்று எண்ணாமல் உண்மையை எழுதுகிறீர்கள். உங்கள் நேர்மைக்கு என்னுடைய பாராட்டுக்கள் நீங்கள் இன்னும் நன்றாக துணிவுடன் எழுதுவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன். உங்களுக்கும் உங்கள் ஈழநாதத்திற்கும் எனது வாழ்த்துக்கள்.

இது எங்களைப் பாராட்டிவந்த கடிதம் என்பதற்காக நீங்களும் அறியக் கூடாதா? நீங்களும் தெரிந்து கொள்வதற்காக இதை இங்கு தந்திருக்கிறேன்.

# இந்து இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்புத் திட்டம்

(கொழும்புத்துறை)

யாழ்.மாவட்ட இந்துஇளைஞர் பேரவை இந்து இளைஞர் யுவதிகளின் பொருளாதார சுயவேலைவாய்ப்புத் துறைகளிலும் அதிக ஆர்வம் காட்டி வருவதாகவும் இதற்கான செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் இந்து இளைஞர் பேரவைத்தலைவர் திரு. வெ. கெ. தனபாலன் தெரிவித்துள்ளார்.

இன்றைய சூழ்நிலையில் சுயதொழில் வேலைவாய்ப்பும் தொழிற்பயிற்சியும் கிராம ரீதியாக இந்து இளைஞர் மன்றங்கள் மூலம் மேற்கொள்ளப்படும். பனம் பொருள் உற்பத்திப் பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பதுடன் பனம்பழம் சேகரிப்பு பனம்பழச்சாறுஉற்பத்திகள் செய்யப்படும்.

இது சம்பந்தமாகப் பனை அபிவிருத்திச்சபை தொழில் நுட்ப உதவிகளை வழங்கவும் சந்தைப்படுத்தவும் முன்வந்துள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (24)

# யாழ். கோட்டையைப் பார்க்க அனுமதி கிடைக்குமா?

ஆசிரியர்,
ஈழநாதம்.

நாம் யாழ்.நகரில் ஒரு பிரபல்யமான தனியார் கல்வி நிலையம் ஒன்றில் கல்விகற்று வருபவர்கள். எமக்கு எல்லோரையும் போலவே பலகாலமாக யாழ். கோட்டை இராணுவ முகாமை சுற்றிப்பார்ப்பதற்கு மிகுந்த ஆர்வம் உள்ளது. இது பற்றி நாம் நேரடியாக யாழ். கோட்டையில் அமைந்துள்ள பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு எமது ஆதங்கத்தைப் தெரிவித்தோம்.

ஆனால் பொலிஸ் பகுதியிலிருந்து வந்த மறுமொழியோ கோட்டை இராணுவ அதிகாரிகளுடன்தான் இவ் விடயம் பற்றி கேட்க வேண்டும் என்பதாகும்.

கோட்டை இராணுவ அதிகாரியை சந்தித்து கேட்கும்படி கூறப்பட்டதே தவிர அவ்வதிகாரியை சந்திப்பதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை.

கடந்தவியாழக்கிழமை நாம் நேரடியாக கோட்டை பொலிஸ் அத்தியட்சகர்அலுவலகத்திற்கு சென்று இராணுவ அதிகாரியை சந்திப்பதற்கு அனுமதி கேட்ட போது இப்போது சந்திக்க முடியாது என கூறப்பட்டது. நாம் எமது ஊருக்கு திரும்பவேண்டியதாயிற்று.

இதில் நாம் குறிப்பிட வேண்டியது என்னவென்றால் இளவாலையில் இருந்து நாம் எல்லோரும் பஸ் கட்டணம் செலவழித்து வந்தும் கோட்டையை பார்க்க முடியாது திரும்பவேண்டியதாயிற்று.

## மக்கள் மடல்

சனி ஞாயிறு கிழமைகளில் நாம் எமது கல்வி நிலையத்திற்கு வருவதால் கடந்த வியாழன் விடுமுறையாக இருந்ததால் அனைவரும் சென்றிருந்தோம் தொடர்ந்தும் எம்மால் இவ்வாறு ஏமாற முடியாது.

ஆகவே தயவு செய்து உங்கள் பத்திரிகைசார்பாக எமக்காக அனுமதி பெறும் விபரம் பற்றியோ அல்லது அனுமதி பெற்றோ தருவீர்களா?

ச. ப. சாந்தன்
இளவாலை

## குளிர்பான...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

யையேற்றுவதும் ஒரு போத்தலுக்கு ஒரு ரூபா அளவில் இலாபமீட்டுவதும் ஏற்புடையதல்ல.

மேலும் பொருட்களின் விலைகளை விரும்பியவாறு முதலாளி தீர்மானிக்கலாம் என்பதற்கு எமதுமக்களின் ஒரு பகுதியினரின் நடத்தையும் பிரதான காரணிகளாகும். அதாவது வெளிநாடுகளில் இருந்து வரும் 100, 200 டொலர்கள் அல்லது பவுண்கள் இலங்கை ரூபாக்களில் பல ஆயிரம் ரூபாக்களாக மாறும் போது அவர்களுக்கு பொருட்களின் விலைகளில் ஏற்படும் அதிகரிப்புத் தெரிவதில்லை. அதாவது பொருட்களின் விலையேற்றத்தை விட வெளிநாட்டுக் காசுக்களின் பெறுமதி அதிகரிப்பு உயர்வானதாகும். ஆகையினால் அவர்களும் பொறுப்பற்றரீதியில் செலவீடுகள்செய்கின்றார்கள். ஆனால் சாதாரணமாக இன்று 2000 ரூபாவை மாதாந்தச் சம்பளமாகக் கொண்டு இங்கு வாழ்க்கையை நடத்தும் சாதாரண நபரினால் ஒரு ரூபா அல்லது இரண்டு ரூபா விலை ஏற்றத்தைச் சமாளிக்கமுடியாது என்பதை அவர்கள் எண்ணுவதில்லை.

மேலே விபரிக்கப்பட்டதை அடிப்படையாக நோக்கும் போது இன்றுதமிழ்ப்பகுதியில் பொருட்களுக்கு ஏற்பட்டிருக்கும் அபரிவிதமான விலை ஏற்றம் நாட்டில் நிலவும் அசாதாரண நிலையினாலோ அன்றி விடுதலைப் புலிகளின் வரியினாலேயல்ல என்பது இது முதலாளிமாரின் உயர்ந்தளவுலாப நோக்கும் ஒரு சில மக்களின் பொறுப்பற்ற செயற்பாடுமே காரணம்என்பது தெரியவரும்

# புங்குடுதீவு வீதிகள் அவலநிலை

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு வல்லன் பகுதிக்கு செல்லும் அனைத்து வீதிகளும் ஒழுங்கைகளும் மிகவும் மோசமான நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகின்றன.

குறிச்சுக்காட்டுச் சந்தி, ஸ்ரீ கணேச மகாவித்தியாலய சந்தி, போக்கத்தை சந்தி ஆலடிச் சந்தி, தட்டயன்புலம் உபதபாலக சந்தி ஆகிய இடங்களூடாக வல்லன் பகுதிக்குச் செல்லும் பிரதான வீதிகள் இவ்வாறு மோசமான நிலையில் காணப்படுகின்றன.

(22)

# முதலுதவி வகுப்புகள்

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதி சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவின வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய பகுதிகளில் புதிதாக முதலுதவி வகுப்புக்களை ஆரம்பித்துள்ளனர்.

இந்த முதலுதவி வகுப்புக்களில் பங்கு பற்றுவோருக்கு தாதிப் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகின்றது.

இப்படையில் சேர்ந்து பயிற்ச்சி பெற ஆர்வமுடையோர் இவர்களுடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்படுகின்றார்கள். (15)

ஈழநாதம்

# அமைதிக்கு புலிகளின் தியாகமும் மக்களின் உயிரிழப்புமே காரணம்! - காஸ்ரோ

(சித்தங்கேணி)
எமதுபிரதேசத்தில் அமைதியான சூழ்நிலையில் விளையாட்டுப் போட்டிகளையும் கலை நிகழ்ச்சிகளையும் நடத்தக்கூடியதாக இருப்பதற்குக் காரணம், வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளின் தியாகமும், பொதுமக்களின் உயிர் இழப்புக்களுமேயாகும்.

இவ்வாறு காரைநகர் தனியார் சிறு பேருந்துச் சங்கத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவுப்பகுதி அரசியல் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ குறிப்பிட்டார்.

துறைமுகம் சித்திரக்கூடல் சித்திவினாயகர் ஆலய முன்றலில் டாக்டர் எஸ். ரி. சிங்க அரிய ரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. காஸ்ரோ அவர்கள் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

இன்று ஏற்பட்டுள்ள தற்காலிக அமைதியான சூழ்நிலையில் மக்கள் கட்டிடங்கள், மதில்கள் கட்டுவது போன்ற அபிவிருத்தி வேலைகளிலும், நிவாரணம் பெறுவதிலும் முண்டியடித்துக் கொண்டு ஈடுபடுகிறார்கள். இவர்கள் எமது எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திப்பதில்லை. தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியிலே எமக்கு எதிரான பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பாக நாம் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருத்தல் வேண்டும். சம இராணுவ பலமும் சம அரசியல் பலமும் பொருந்திய நிலையிலேயே நாம் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நிகழ்த்துகிறோம். நிரந்தர அமைதியையும் சமாதானத்தையுமே நாம் விரும்புகிறோம் தமிழ் மக்கள் எல்லோரதும் ஏகோபித்த ஆதர இருந்தால் நாம் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வது இலகுவாயிருக்கும். எனவே தமிழ் பேசும் அனைவரும் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் கீழ் ஒன்றுதிரண்டு பூரண ஆதரவை வழங்க வேண்டும்.

யாழ் வர்த்தக சங்கத் தலைவர் திரு. வி குலரத்தினம், வடபிராந்திய மினிபஸ் சங்கங்களின் சமாசத் தலைவர் திரு. பொன். மதிமுகராசா, மகாராணி சோமசேகரம், காரைநகர் கம்பன் கழக அமைப்பாளர் ரி. சிவகுமாரன், அலங்கார் தம்பிராசா, நேரக்கணிப்பாளர் இராசலிங்கம் திரு. எஸ். சிவரூபன், திரு சு. தம்பிராசா உட்பட மற்றும் பலர் உரைநிகழ்த்தினர். திரு. பொன். மதிமுகராசா பரிசில்களை வழங்கினார். (23)

## கல்விவளர்ச்சி பற்றி கலந்துரையாடல்

(மூதூர்)
மூதூர் அண்ணகார் மகளிர் மகாவித்தியாலயத்தில் கடந்த செய்வாய்க்கிழமை மாலை மூன்று மணியளவில் மூதூர் ஈச்சளம்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளிலுள்ள அனைத்து அதிபர்கள், ஆசிரியர்களையும் அழைத்து, மாணவர்களின் கல்வி வளர்ச்சி சம்பந்தமாக கலந்துரையாடப்பட்டது.

இக் கலந்துரையாடலை தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் ஒழுங்கு செய்தனர்.

## கொரியாவுக்கு வர்த்தகக் குழு

(கொழும்பு)
● இலங்கைக்கும் தென் கொரியாவுக்குமிடையில்வர்த்தகத்தை அதிகரிப்பது பற்றி பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக முப்பது பேர் கொண்ட இலங்கை வர்த்தகக் குழு ஒன்று இன்று சியோல் நகரத்திற்குப் புறப்பட்டுச் செல்கின்றது.

இலங்கை கொரியா பொருளாதாரக் குழு முதற் தடவையாக இலங்கையின் உல்லாசப் பிரயாணத் தொழில் பற்றி ஆராயுமென்று உத்தியோக பூர்வவட்டாரங்கள் லங்காபுவத்துக்கு தெரிவித்தன.

## தென்பிராந்திய போ. வ. ச. ஒய்வூதிய வயதுவரையும் சம்பளம் வழங்கப்படும்

(மாத்தறை)
தென்பகுதி பிராந்திய போக்குவரத்துச்சபையில் கடமையாற்றியபோது ஜே.வி.பி தாக்குதல்களால் மரணமான 29 ஊழியர்களுக்கு ஒய்வூதிய காலம் வரையும் சம்பளம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை இவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடும் வழங்கப்பட்டது.

இதுபோல எந்தவொருபிராந்தியசபைகளும் இவ்வாறு நிவாரணஉதவி வழங்கவில்லை.

## தமிழ் பேசும் மக்களின் இலட்சியம் ஒன்றே

**ஈரோஸ் பரராஜசிங்கம்**

(யாழ்ப்பாணம்)
உலக வரலாற்றுத் துரோகிகள் தப்பியதாக சரித்திரமேயில்லை. வரலாறு துரோகிகளை மன்னிப்பதும் இல்லை இது வரலாற்று நியதி. இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். மத்திய கல்லூரி மாணவன் கோபாலகிருஷ்ணனின் நினைவாக யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற படித்த இளைஞர் தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ஈழவர் ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த எஸ். பரராஜசிங்கம் (பா.உ,) தெரிவித்தார்

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இன்றைய காலகட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் இலட்சியம் ஒன்றே என்றும், இடையிடையே தீயசக்திகளால் பல இடர்களை நாம் சந்தித்துக் கொள்ள வேண்டியுள்ளது என்றும் எனினும் இலட்சியத்தீ பிரகாசிப்பதை கண்கூடாகப் பார்க்கிறோம் என்றார்.

விழாவில் ''ஐக்கியத்தின் மறுபக்கம்'' என்ற ஈரோஸ் வெளியீடு இலவசமாக வளங்கப்பட்டது.

விசேட தபால் உறை ரத்துச் செய்யும் நிகழ்ச்சி இடம் பெறவில்லை. (மு)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

## தமிழ் நாட்டில் பிரிவினை வாதம் ராஜீவின் விசமத்தனமான பிரச்சாரம்

**கருணாநிதி குற்றச்சாட்டு**

(சென்னை)
தமிழ் நாட்டில் பிரிவினை வாதம் தலைதூக்கியுள்ளதாக முன்னாள் பிரதம மந்திரி ராஜீவ் காந்தி விசமத்தனமான பிரச்சாரம் செய்து வருவதாக தமிழ்நாட்டு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார்

மேலும் அவர் குறிப்பிடுகையில் தமிழ் நாட்டில் பிரிவினைவாதம் தலை தூக்கியுள்ளதுதாகவும் அதனை இன்றைய தமிழ் நாட்டு அரசு அனுமதித்திருப்பதாகவும் முன்னாள் பிரதம மந்திரி பிரச்சாரம் செய்து வருவது திராவிட முன்னேற்க்கழக அரசாங்கத்தின்மீதுள்ள காள் புணர்ச்சியே எனவும் குற்றம் சாட்டினார்.

மேலும் 1962ஆம் ஆண்டிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் பிரிவினைவாதத்தைக் கைவிட்டதாக அறிஞர் அண்ணாத்துரை அறிவித்திருந்தார் எனவும் அதனை அன்றைய முதலமைச்சர் பக்தவட்செலம் பாராட்டியிருந்தார் எனவும் தெரிவித்தார்.

மேலும் பஞ்சாப்பில் பிந்திரன் பாலேரியை வளர்த்து விட்டவர்கள் காஸ்மீரில் பிரிவினைவாதம் வளர்வதற்கு காரணமாக இருந்தவர்கள் இன்று தமிழ் நாட்டு அரசிற்கு எதிரான, விடுதலை புலிகள் பற்றிய பிரச்சாரத்தைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளார்கள் எனவும் தெரிவித்தார். தமிழ்நாட்டில் பின்பற்றுபவர்கள் ஒரு சிலர் இருப்பினும் அவர்களைஅவர்களது நிழல்கூடத் தொடர்வதில்லை எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் தி. மு. க. அரசிற்கெதிராக டில்லியிலும் வடமாநிலங்களிலும் தப்பான அபிப்பிராயத்தை செயற் படுத்துவதே ராஜீவ்காந்தியின் நோக்கம் எனவும் கருணாநிதி கூறினார்

---

**குடும்பத்...**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
தடிஅடி சண்டையில் தலையில் பலத்த தாக்குதலுக்குள்ளானார். இதனை தொடர்ந்து மன்னார் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மோசமான நிலையில் யாழ் வைத்தியசாலைக்கு அன்புலன்ஸ் மூலம் கொண்டுவரப்பட்டு அங்கு மரணமானார்.

இவரது உடல் சட்டவைத்தியர் செல்வி கே. கனகரட்ணத்தால் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு, பதில் நீதவான் பி. என். அன்ரனியால் கொலை என தீர்ப்பு வழங்கப்பட்டது. (லோ)

---

**காமினி---**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
லண்டனில் இருந்து கொண்டே இராஜினாமாச் செய்யலாம் எனவும் கருதப்படுகின்றது.

கொத்மலை நீர்த்தேக்கத்தில் 70 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட பெளத்தடகோபா சின்னமும் முற்றுப் பெறாமல் இருப்பதும் அத்திட்டத்திற்கு அமைச்சரவையின் அங்கிகாரம் பெறாமையுமே விசாரணைக்கு உத்தரவிடுவதற்குக் காரணமாக அமையலாம் எனவும் அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

---

**உண்டியலைத்---**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு முன்பாகவும் பல தடவைகள் உண்டியல் உடைக்கப்பட்டு உண்டியல் பணம் திருடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

---

**சடலம்---**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
உடைய இந்நபர் வெள்ளை நிற சேட்டும் பச்சை, நீலம் கோடிட்ட சாரமும் அணிந்துள்ளார் தலைமயிர் பக்கவாட்டில் வளித்து இழுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

---

**எம்பிக்கள்---**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
இதன் பின்னர் ஈ. பி. ஆர். எல். எவ். வைச் சந்திப்பதற்கு இம்மாதம் பதினைந்தாம் திகதியை ரஞ்சன் விஜேரத்தினா நிர்ணயித்திருந்தார்

இதேசமயம் வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சரும் ஈ. பி. ஆர். எல். எவ். தலைவருமான வரதராஜப்பெருமாள் நாடு திரும்பினால் இலங்கை அரசமைப்புக்கு விரோதமாக தனிஈழம் பிரகடனப்படுத்தியதற்காக அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்

---

**மகாசங்க...**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
மும் பேணப்பட்டு வந்தது என்றும், அதனால் இவர் இவ்வாறு மதம் மாறி மீண்டும்

---

**குரங்கினால் . . .**

(1ஆம் பக்க தொடர்ச்சி)
காட்டுக்குச் சென்று குரங்குகளுடன் வாழ்வதையே விரும்புவதாகவும் அத்துடன் குரங்கு

---

**ஆசிரியர்---**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
வித்தார்.

மாகாணத்திலுள்ள ஏனைய திணைக்களங்கள் தமது ஊழி

---

**தொழிற்சங்க---**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் இந்தநல்லசூழ்நிலை



செல்வன்

## இராமுப்பிள்ளை (சுப்பிரமணியம்) திருநாவுக்கரசு கண்ணன் (ஜெமினி)

ஆண்டவன் நமக்களிப்பு: 14 - 05 - 1970
அநியாய அழைப்பு: 12 - 04 - 1989

திண்தோள் செல்வா! திருநாவுக் கரசா!
மண்ணினைக் காக்கமார் தட்டிய வீரா!
தண்டா மரைமுகத் தரளவெண் சிரிப்பா!
கண்டோர் நெஞ்சம் களிக்குங் கண்ணா!
ஓடி மறைந்தது ஓராண்டு விரைந்து
தேடிக் கலங்கிறோம் சிதைந்தெம் உள்ளம்
பத்தொடு ஒன்பது வயதடா உனக்கு
இத்தனை நாட்டுப் பற்றடா உனக்கு
பெற்ற தந்தை தாயொடு மற்றை
உற்ற சோதரர் உறவோர் கலங்கிட
நாட்டைக் காத்திட நண்ணிய வீரா!
ஏட்டில் பொறித்திட எழுந்தது உன்பெயர்.

செல்வநாயகம் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

அப்பா, அம்மா, சோதரர், நண்பர்கள் உறவினர்கள்.

(R 476)

# மரண அறிவித்தல்

## திரு. சின்னையா பொனிப்பாஸ் (மயிலிட்டி)

(முன்னாள் பொது முகாமையாளர், இலங்கை மின் சாரசபை)

மயிலிட்டியைச் சேர்ந்த திரு. சின்னையா பொனிப்பாஸ் 9.5.90 அன்று கொழும்பில் காலமானார். அன்னார் ஈவாவின் அன்புக் கணவரும், நிர்மலா, நிருஞ்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும், யோன் (லண்டன்) னின் மாமனாரும், பிலோமினா, நியூசியஸ் (நைஜீரியா) கில் பேட், எடல்றீற்றா, யோசேப்பின் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் 14. 5. 90 திங்கட்கிழமை (இன்று) பி.ப. 3.30 மணியளவில் மயிலிட்டி புனித காணிக்கை மாதா சேமக்காலையில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

6 ஆம் வட்டாரம், மயிலிட்டி.

தகவல்: சி. சிவபாதம் (ஜோர்ச்) (மருமகன்)

(R-475)

கொள்ள வேண்டியுள்ளது என்றும் எனினும் இலட்சியத் தீ பிரகாசிப்பதை கண்கூடாகப் பார்க்கிறோம் என்றார்.

விழாவில் ''ஐக்கியத்தின் மறுபக்கம்'' என்ற ஈரோஸ் வெளியீடு இலவசமாக வளங்கப்பட்டது.

விசேட தபால் உறை ரத்துச் செய்யும் நிகழ்ச்சி இடம் பெறவில்லை. (மு)

### மகாசங்க...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மும் பேணப்பட்டு வந்தது என்றும், அதனால் இவர் இவ்வாறு மதம் மாறி மீண்டும் இலங்கைக்கு வரும் நடவடிக்கையானது இலங்கையின் பௌத்த சாசனத்திற்கு அவப்பெயரையும் இழிவையும் ஏற்படுத்துவதாக இருக்கிறது எனக் கூறினார்.

ஆகவே பௌத்த சாசனத்தை பாதுகாக்கும் பொறுப்பைக் கொண்டுள்ள ஜனாதிபதி பிரேமதாசாவின் கவனத்திற்கு இதைக் கொண்டு வருவதாகவும், அவர் குறிப்பிட்டார்.

### நாடு முழுதும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தநோய் கிராமப் புறங்களிலும் பன்றிகள் கூடுதலாக காணப்படும் வயல்புறம் சேறு சகதிகொண்ட பகுதிகளிலுமே பெரும்பாலும் பரவுகிறது.

### அனுமதிப்பத்திரம்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரோதமானவை, மக்களைத் தொந்தரவுக்குள்ளாக்குவதென்று சட்டத்தரணி தனது மனுவில் காரணம் காட்டியுள்ளார்.

இதேவேளை பழைய அனுமதிப்பத்திரத்துடன் படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்து ரூபா75உம் கொடுத்தால்தான் புதிய சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

வழக்கு மேமாதம் 3ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிபதி சரத் என். சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மே 31ஆம் திகதிக்கு முன்னதாக மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு எதிரான காரணங்களை சமர்ப்பிக்கும்படி எதிராளிகளை நீதிபதி பணித்துள்ளார்.

### சாரண ...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமரர் வரதலிங்கம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றசாரணர் கூட்டம் ஒன்றில்கலந்துகொண்டு விட்டுத்திரும்புகையிலேயே இவ் விபத்தில் சிக்கி மரணமானார் (24)

### உண்டியலைத்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு முன்பாகவும் பல தடவைகள் உண்டியல் உடைக்கப்பட்டு உண்டியல் பணம் திருடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### குரங்கினால் . . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

காட்டுக்குச் சென்று குரங்குகளுடன் வாழ்வதையே விரும்புவதாகவும் அத்துடன் குரங்குகளுக்குக் கொடுக்கும் பழங்களையே விரும்பி உண்ணுவதாகவும் செயற்கையாகச் செய்த தின்பண்டங்கள் எதையும் விரும்பவில்லையென சிறுமியைப் பராமரித்துவருபவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். அத்துடன் இச்சிறுமி மனிதருடன் பழகுவதற்கும் எதுவித விருப்பமிருப்பதாகவும் காட்டிக் கொள்ளவில்லை எனவும் இச் சிறுமியைபராமரித்தவர்கள் தெரிவித்தனர்.

குழந்தைப்பருவத்தில் வீட்டில் சகிக்கமுடியாதகொடுமைகளை இச்சிறுமிக்கு உறவினர்கள் இழைத்தமையால் வீட்டிலிருந்து தப்பி காட்டுக்கு ஓடியதாக விசாரணைகளின் பின் தெரிய வருகிறது.

### யாழ். கோட்டை. . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிலரை தவிர பெருந்தொகையானவர்க்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இது குறித்து யாழ். கோட்டை பொலிஸ் அத்தியட்சகர் ஜெயராஜன் அவர்கள் தம்மாலோ அல்லது பொலிசாராலோ எதுவித தடையும் வதிக்கப்பட மாட்டாது இராணுவத்தினரே தமது பாதுகாப்பு அரண்களின் இரகசியங்ளை பேணவும் வேறு சில முக்கிய விடயங்களையும் முன்வைத்து மறுத்துள்ளனர் இருந்தும் சில வெளியூர் உள்ளாசப் பயணிகளையும் ஒரு சில மாணவர்களையும் உள்ளே நுளைய அனுமதித்ததை தாம் அவதானித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இருந்தும் தற்போது இராணுவத்தினர் மாணவர்களையோ அன்றி வெளியார் எவரையும் கோட்டை முகாமுன் வாயிலுக்கே அனுமதிப்பதில் மிக கடுமையான போக்கை காட்டுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (லோ)

### சடலம்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உடைய இந்நபர் வெள்ளை நிற சேட்டும் பச்சை, நீலம் கோடிட்ட சாரமும் அணிந்துள்ளார் தலைமயிர் பக்கவாட்டில் வளித்து இழுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

### ஆசிரியர்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தார்.

மாகாணத்திலுள்ள ஏனைய திணைக்களங்கள் தமது ஊழியர்களுக்கு உத்தியோகஅடையாள அட்டைகளை வழங்கியுள்ளன இதனால் அவ் ஊழியர்கள் ஏனைய திணைக்களங்களில் அடையாளம் காணப்படுவதுடன் அவர்களுக்கு மற்றைய திணைக்களங்களில் வேலைகளை முடித்துக்கொள்ளவும் வாய்ப்பாக இருக்கிறது.

ஆனால் ஆசிரியர்களுக்கு உத்தியோக அடையாள அட்டைகள் வழங்கப்படாமையால் பல வகையான கஷ்டங்களை அவர்கள் சந்திக்க வேண்டியுள்ளது,

மேலும் அடையாள அட்டைகள் வழங்கப் படாமல் அவர்கள் தினந்தோறும் எதிர்கொள்ளும் பாதுகாப்புப்பிரச்சினைகளும் தீர்க்கப்படும்.

### க. பொ. த (உயர்தரம்). .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேறுகள் ஆடி மாதத்தில் வெளிவரவுள்ளன. விடைத்தாள்களுக்கு புள்ளியிடும் வேலைகளில் 98 % முடிவடைந்து விட்டது என்றும், அடுத்த வாரத்தில் மிகுதி விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் வேலை முடிந்துவிடும் என்று பரீட்சைத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மொத்தம் 550000 பரீட்சார்த்திகள் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற க. பொ. த (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### புதிய தலைமை. . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாவை இலங்கை அரசு குற்றம் சாட்டுவதாகக் கூறியிருப்பதாகவும் இது முன்னைய ஜே. வி. பி. தலைமை கடைப்பிடித்த கொள்கைக்கு முற்றிலும் மாறாக இருப்பதாக இந்திய வானொலிச் செய்தி கூறியது.

இதே சமயம் தற்பொழுது தெற்கில் மீண்டும் கொள்ளைகள் அதிகரித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### எம்பிக்கள்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பின்னர் ஈ. பி. ஆர். எல். எவ். யைச் சந்திப்பதற்கு இம்மாதம் பதினைந்தாம் திகதியை ரஞ்சன் விஜேரத்தினா நிர்ணயித்திருந்தார்

இதேசமயம் வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சரும் ஈ. பி. ஆர். எல். எவ். தலைவருமான வரதராஜப்பெருமாள் நாடு திரும்பினால் இலங்கை அரசமைப்புக்கு விரோதமாக தனிஈழம் பிரகடனப்படுத்தியதற்காக அவர்மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா எச்சரித்திருந்தார்.

ஏற்கனவே உயர் நீதிமன்றத்தினால் ஈ. பி. ஆர். எல், எவ், பொதுச் செயலாளர் பத்மநாபாவுக்கு எதிராக பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதால் பத்மநாபாவும் கொழும்புக்கு வரமுடியாமலிருக்கிறார்.

நாளை செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற கூட்டம் நடைபெற விருக்கிறது இக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு ஈ. பி. ஆர். எல். எவ், எம்பிக்கள் வருவார்கள். பாது காப்பு ராஜாங்க அமைச்சரும் பெருந்தோட்டத் துறை அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினாவும் பாராளுமன்றம் வருவார்.

இச்சந்தர்ப்பத்தில் ஈ.பி.ஆர். எல். எவ். எம்பிக்கள் குழுவை பாராளுமன்றக் கட்டிடத்தில் அமைச்சர் ரஞ்சன் சந்தித்துப் பேசுவார்.

#### விடுதலைப்புலிகள் அதிருப்தி

அன்னிய இந்தியப்படையுடன் உறவு கொண்டாடி சமுக விரோதச் செயல்களில் ஈடுபட்டிருந்த ஈ. பி. ஆர். எல். எவ்வுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்த விருப்பதாக செய்தி வெளிவந்ததைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் அதிருப்தி தெரிவித்திருந்தது தெரிந்ததே

### மகாவலி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடிக்க மேலதிக பணமாக ரூபா 7 கோடி தேவைப்படுகிறதாம்.

கொத்மலை நீர்த்தேக்கத்தின் வலது கரையோரத்தில் இந்த மகாசேயா வேலைகள் இடம்பெறுகின்றன.

இந்தமகாசேயாவை நிர்மாணிப்பதற்கு ரூபா 15 கோடி தேவையென 1983 இல் மதிப்பிடப்பட்டது. ஏலவே ரூபா 7 கோடி 87 லட்சம் செலவாகியுள்ளது. இதில் ரூபா 87லட்சம் அன்பளிப்பாகக் கிடைத்ததென்றும், மிகுதிரூபா 6கோடி மகாவலி அபிவிருத்தி நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டது

கொத்மலை நீர்த்தேக்கத்தில் 70 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட பௌத்த டகோபா சின்னமும் முற்றுப் பெறாமல் இருப்பதும் அத்திட்டத்திற்கு அமைச்சரவையின் அங்கிகாரம் பெறாமையுமே விசாரணைக்கு உத்தரவிடுவதற்குக் காரணமாக அமையலாம் எனவும் அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

### தொழிற்சங்க---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் இந்தநல்லசூழ்நிலையைக் கெடுப்பதற்கு இதுவரையும் தமிழ்,முஸ்லிம் தொழிலாளர்களைப் பிரித்து வைத்திருந்த தென்னிலங்கைத் தலைமையைக் கொண்ட தொழிற்சங்க வியாபாரிகள் முயற்சி செய்து வருகிறார்கள். இந்நோக்கத்திற்காக எம்மீது பொய்யான குற்றச்சாட்டுக்களையும் சுமத்தி வருகிறார்கள். இதுகுறித்து தமிழ், முஸ்லிம் தொழிலாளர்கள் விழிப்பாக இருக்க வேண்டும். தமிழ் ஈழப் பகுதியிலுள்ள தமிழ், முஸ்லிம் தொழிலாளர்கள் எமது தலைமையின் கீழ் அணிதிரள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

ஒவ்வொரு தொழிற் கூடங்களிலும் அமையப் போகின்ற தொழிற்சங்கநிர்வாகம், நாட்டுப்பற்று, வர்க்க உணர்வு, திறமை நேர்மைஆகிய அம்சங்களைக் கொண்டவர்களைக் கொண்டுஅமைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் தமிழீழத்தைச் சேர்ந்த எல்லாப் பிரதிநிதிகளும் தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகளான வில்லிரிஸ், கதிரேசு ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## நெல்லியடியில் தேனிசைச் செல்லப்பா

(கரவெட்டி)

தமிழீகத்தின் பிரபல எழுச்சிப் பாடகரும் தமிழீழத்தின் அபிமான புரட்சிப் பாடகருமாகிய திரு.செல்லப்பாவின் எழுச்சிப்பாடல் நிகழ்ச்சி எதிர்வரும்18ஆம் திகதி நெல்யடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முன்னாள் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினியின் ஆலோசனையின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்திற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் இல்லையாம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 14-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.